விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 11 ஞாயிற்றுக்கிழமை (25.06.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 188

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் இராணுவத்தினர் அத்துமீறி நுழைவு !

### மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் நேற்றுக் இராணுவத்தினர் நுழைந்து அங்கிருந்த மாணவர்களை அச்சுறுத்திவிட்டுச் சென்றதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் அத்துமீறி உள்நுழைந்த இராணுவத்தினர் மாணவர்களை அச்சுறுத்திச் சென்றுள்ளனர்.

இந் நிலை மிகமோசமான பதற்ற சூழ்நிலையினை யாழ்.குடாநாட்டில் ஏற்படுத்துகின்ற செயற்பாடாகும்.

மாணவர்கள் பல் வேறு இராணுவ நெருக்குவாரங்களுக்கு மத்தியில் கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் இவ் வேளை மாணவர்களின் கல்விக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன் மாணவர்களின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தி உள்ளதாக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகத்தினுள் இராணுவத்தினர் உள் நுழைவதற்கு இலங்கை கல்விசார் சட்டத்தின்படி அனுமதி இல்லை. ஆனால் இங்கு இலங்கைச் சட்டத்தையே மதிக்காத வகையில் இராணுவ அத்துமீறல்கள் தொடர்கின்றன.

இச் சம்பவங்களினை நாம் வன்மையாகக்கண்டிப்பதுடன் இராணுவத்தினர் பல்கலைக்கழகத்தினுள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அசிட் வீச்சுக்கு இலக்கானவர் வைத்தியசாலையில் அனுமதி

### செம்பியன் ஒழுங்கையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாதோரால் அசிட் வீச்சுக்கு இலக்கானவர் நெஞ்சுப் பகுதியில் எரிகாயங்களுடன் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5மணியளவில் கொக்குவில் செம்பியன் ஒழுங்கையில் இடம் பெற்றுள்ளது.

வேலணை பிரதேச சபையின் சிரேஷ்ட தொழிநுட்ப உத்தியோகஸ்தரான செ.உதயகுமார் (வயசு 53) என்பவர் மீதே அசிட் வீச்சு இடம் பெற்றுள்ளது.அவரது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் அவரின் பெயரை அழைத்த போது பிரஸ்தாப நபர் வெளியே சென்றதாகவும் அப்போது அவர்மீது அவர்கள் அசிட் வீசிவிட்டுத்தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.நெஞ்சில் எரிகாயத்திற்குள்ளான அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (து-133)

# சுவீடன், பின்லாந்து, டென்மார்க்

# கண்காணிப்பாளரை விலக்குவதற்கான

# விடுதலைப்புலிகளின் காலக்கெடு நீடிப்பு

(கிளிநொச்சி)

சுவீடன், பின்லாந்து மற்றும் டென்மார்க் நாடுகளின் 37 கண்காணிப்பாளர்களை விலக்கிக்கொள்வதற்கு விடுதலைப்புலிகள் வழங்கியிருந்த கால அவகாசத்தை நீடித்துள்ளனர்.

முன்னர் ஒகஸ்ட் முதலாம் திகதி வரை வழங்கப்பட்ட கால அவகாசம் தற்பொழுது செப்டெம்பர் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் நோர்வேக்கு அறிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## சண்டிலிப்பாயில் சுற்றிவளைப்பு

சண்டிலிப்பாய் பகுதியில் நேற்று அதிகாலை பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சுற்றிவளைப்பு தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது வீதியால் சென்ற வாகனங்களும் மக்களும் தீவிர சோதனையிடப்பட்ட பின்னர் மேலேசெல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இராணுவத்தினருடன் பெருமளவு பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். இதேவேளை துன்னாலை கிழக்கு-தெற்குப் பகுதிகளில் படையினர் நேற்று முன்தினம் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

படையினர் சந்தேகத்துக்கு இடமானவர்களை விசாரணை செய்தனர். இருப்பினும் எவரையும் கைதுசெய்யவில்லை.

இதேவேளை குருநகர் பகுதியிலும் படையினர் நேற்று முன்தினம் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். (ச-5,15,133)

## வவுனியாவில் தாக்குதல் இரு இராணுவத்தினர் பலி

(வவுனியா)

வவுனியா குருமன்காட்டுப்பகுதியில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இராணுவத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் பிற்பகல் 2.45 மணியளவில் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட இருவரும் சிகிச்சை பயனளிக்காத நிலையிலேயே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

## ஹர்த்தாலினால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தாலினால் இயல்பு நிலை முற்றாக பாதிக்கப்பட்டிருந்தது. மக்கள் நடமாட்டமின்றி நகரப்பகுதி வெறிச்சோடிக்காணப்பட்டது.

போக்குவரத்து சேவை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. நேற்றுக் காலை ஒருசில சேவைகள் இடம்பெற்றபோதும்பின்னர் எந்தவித போக்குவரத்துக்களும் இடம் பெறவில்லை.

வர்த்தக நிலையங்கள், அரச திணைக்களங்கள் எவையும் இயங்கவில்லை. கிராமப்புறப்பகுதியில் ஒரு சில கடைகள் காலையில் திறக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் பூட்டப்பட்டிருந்தன.பயம் காரணமாக மக்கள் வீதிகளுக்கு வரவில்லை. இதேவேளை ஏ-9 வீதியூடான போக்குவரத்துக்கள் நேற்று முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன. வெளிமாவட்டங்களிலிருந்து ஒரு சில வாகனங்கள் முகமாலையூடாக யாழ்.வந்தன. எனினும் இங்கிருந்து எவையும் செல்லவில்லை.

முன்னைவிட நேற்று என்றுமில்லாதவாறு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இரா்ணுவத்தினரின் நடமாட்டமும் குறைவாகவே காணப்பட்டன. வீதிச்சோதனை நடவடிக்கைகளும் நேற்று குறைவாகவே காணப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் இராணுவத்தினரால் சேதமாக்கப்படுவதைக் கண்டித்து நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (து-15,133)

## கொடிகாமத்தில் கிரனைட் வீச்சு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் கச்சாய் வீதிப்பகுதியில் வீதிக் காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோர் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் இரு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று காலை 9.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த இரு இராணுவத்தினரும் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-15,133)

# காலங்கள் மாறலாம் கோலங்கள் மாறலாம் மாறாத இறையன்பைப் பேணுவதே எம் கடமை

இன்றைய உலகின் கவர்ச்சிகளிலும், களியாட்டங்களிலும் மயங்கி, அதுவே உண்மையானது என்று அவற்றின் பின்னே கூட்டமாக ஓடுகிறார்கள் மக்கள். ஆனால் அது கானல் நீர்போன்றது. சிலவேளைகளில் உண்மையானவை புறக்கணிக்கப்பட்டு, போலியானவைகள் ஆட்டிப்படைக்கின்றன. தற்காலிகமான நிறைவையடைவதற்கு உண்மையில்லாதவைகளைப் பின்பற்றவும், அவற்றைப் பெற்றுக்கொள்ளவும் ஓடியோடி அலைகின்றார்கள். இயேசு அப்பங்களைப் பருகச் செய்து மக்களுக்கு உணவளித்ததால் மக்கள் அப்பங்களைப் பெற்றுக்கொள்ள அவரை விடாமல் செல்லுமிடமெல்லாம் பின்தொடர்ந்தனர். இதனைக் கண்ட இயேசு அவர்களைக் கண்டித்தார். ''நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல, மாறாக அப்பங்களை வயிறார உண்டதால் தான் என்னைத் தேடுகின்றீர்கள்'' என்றுகூறி, ''அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலை வாழ்வுதரும் அழியாத உணவுக்காக வே உழையுங்கள்'' என்றார் (யோவான் 6:26, 27)

### *தம்நிலை அறியா வாழ்க்கை*

உலகத்தின் செல்வங்களைத் தேடிக் குவிப்பதிலேதான் மனிதன் இன்பங்காண்கின்றான். ஆன்மீக வாழ்வில் வெறுமையுற்றவனாக இருக்கிறான். இன்றிலிருந்து நாளை தீயிலே போடப்படும் புல்லைப் போன்ற வாழ்க்கையிலே, எப்போது இறப்பு வரும் என்பதை அறிந்து கொள்ள முடியாதவன், ஆணவம், அகங்காரம், மமதையுள்ளவனாக மார்தட்டி, எதிரியாகச் சகோதர மனிதனைக் காண்கின்றான். நாசகார ஆயுதங்கள் கொண்டு ஈவிரக்கமற்ற முறையிலே அப்பாவி உயிர்களைக் காவுகொள்கிறான். இவையெல்லாம் ஏன்? தன் அதிகாரத்தை, தன் வலிமையை உலகில் நிலை நிறுத்தவேண்டுமென்பதற்காகவே.

இப்படியான ஒரு பணக்காரரின் தன் செல்வங்களை எல்லாம் பெருக்கி தன்நிலத்தில் விளைந்த தானியங்களைப் பெரிய களஞ்சியம் கட்டி அவற்றையெல்லாம் அதிலே சேகரித்து இன்னும் பல்லாண்டுகாலம் உண்டு குடித்து இளைப்பாறு நெஞ்சே என்று சொல்லுகிறான். ஆனால் இறைவன் சொல்லுகிறார் ''அறிவிலியே இன்றிரவே உன் உயிரை எடுக்கப் போகிறேன். நீ சேர்த்துவைத்தவையெல்லாம் யாரோ அனுபவிக்கப் போகின்றார்களே!'' என்றார் இதுபோல எத்தனை பேர் பிறருக்கும் கொடுக் காமல் தானும் அனுபவிக்காமல் இறுதியில் மடிந்துபோகின்றார்கள்.

### *வாழ்வு பெறும் வழி*

இவ்வுலகிலே கடவுளுக்கு ஏற்ற செயல்களைச் செய்பவர்களே மறுவுலக பேரின்பப்பாக்கியத்தை அடைந்துகொள்கின்றார்கள். மற்றவர்கள், மாறாத்துயரம் தரும் வேதனை என்றும் நரக நெருப்பிலே தான் வெந்து துடிப்பார்கள் என்பதை இயேசுக் கிறிஸ்து எங்களுக்குச் சொல்லி வைத்திருக்கிறார். ஆகவே அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?'' கடவுள் அனுப்பிய அவரை(இயேசுவை) நம்புவதே கடவுளுக்கு ஏற்ற செயல் என்று இயேசுவே கூறினார். (யோவான் 6:29) நாங்கள் இயேசுவின் அன்பை தேடிப் போகவேண்டும். அவரில் விசுவாசங்கொள்ள வேண்டும். அப்போது இவ்வுலகமோ இவ்வுலகின் செல்வமோ எமக்கு பெரிதாகப்படாது.

## பரமபிதா காட்டிய பாதை

### *இலட்சியத்தில் கருத்தாயிருப்போம்*

புனித பவுல் ஒப்பற்ற செல்வமாகிய இயேசுக்கிறிஸ்துவை அறிந்து கொள்வதே மேலானது. மற்றவைகள் எல்லாம் குப்பையெனக் கருதுகிறேன் என்று தம்முடைய பற்றுறுதியை எமக்கு எடுத்துக் கூறுகின்றார். அவரை நோக்கி ஓடும் பந்தயத்திலே நாம் வெற்றி வாகை சூடிக்கொண்டேன். அதுவே தனது இலட்சியம் என்பதையும் சான்று பகர்கின்றார். புனித பவுலடியாரின் வாழ்வை நாம் மேல் வரிச் சட்டமாகக் கொள்ளவேண்டும். ஏனெனில் கிறிஸ்துவைத்த அழிக்கவென்று புறப்பட்டவர். அந்தக் கிறிஸ்துவால் ஆட்கொள்ளப்பட்ட அவருடைய நற்செய்தியை உலகெங்கும் பறைசாற்றி கிறிஸ்துவுக்காகவே தம் உயிரை யும் அர்ப்பணித்தார். காலங்கள் மாறி



னாலும், கோலங்கள் மாறினாலும் மாறாத இறையன்பை கட்டியெழுப்புவதே எம் ஒவ்வொருவரின் கடமையாகும். நாம்பெற்றுக் கொண்ட அருள் வாழ்வுக்காக கடமைப்பட்டுள்ளோம்.

**அன்ரனி பீற்றர்**

நம்மோடும், அயலவரோடும் ஒப்புரவாகி நாளெல்லாம் நன்மை செய்வதிலும் மற்றவர்களை ஏற்று மன்னிப்பதிலும் கருத்தாய் இருப்போம். அப்போது நாம் நிழல்களைப்பின்தொடர்பவர்களாக அல்ல. நிஜத்தைப் போதிப்பவர்களாகவும் த வாழ்பவர்களாகவும், வாழ வைப்பவர்களாகவும் மாறு வோம்.

## ஆனிப்பூரப் பொங்கல்விழா

சாவகச்சேரி-மறவன்புலோ அருள்மிகு செல்வமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான ஆனிப் பூரப் பெரும் பொங்கல்விழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'ஸ்நபன' அபிஷேகத்துடன்நாட்டில் அமைதி, சமாதானம் நிலைபெறவும், தடைப்பட்டுள்ள சமாதான பேச்சுக்கள் முன்னுள்ள இருள்நீங்கி, பேச்சுக்கள் தொடரவும் வேண்டி 108 தீப்பந்தங்கள் ஆலய வாசலில் ஏற்றப்படும். (௧-7)

## மஹோற்சவம்

புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 11 மணி யளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறும்.

9ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு தேர்த்திருவிழாவும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8மணிக்கு தீர்த்த திருவிழா வும் நடைபெறும். (௧-35)

# இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்க நடவடிக்கை

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் இலங்கை மின்சார சபையை மறு சீரமைப்பது தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்று மின்சக்தி எரிபொருள் அமைச்சர் டபிள்யூ டி.ஜே. செனவிரத்ன தெரிவித்தார். 30 வருடங்களுக்கு மேலாக இலங்கை மின்சார சபையில் சேவையாற்றிய ஊழியர்களை கௌரவித்து அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அமைச்சர் ஜோன் செனவிரத்ன இந்நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றுகையில், எதிர்வரும் ஜூலை முதல் வாரத்தில் இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்தச் சட்டமூலம் இவ் வாரத்திலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்தது. ஆனால் மக்கள் விடுதலை முன்னணியினர் இதற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்ததால் இது பிற்போடப்பட்டது. எப்படியிருந்த போதிலும் அவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்றுக் கொண்டு இந்த சட்டமூலம் ஜூலை மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். மின்சாரசபை மறுசீரமைக்கப்படுவதனால் மக்கள் எவ்விதத்திலும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இதனால் மக்களுக்கு பெரும் நன்மைகளுண்டு. மக்களின் மின்சாரத்தேவைகளை மேலும் அதி சிறந்த முறையில் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே இவ்வாறான சட்ட மூலம் ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கிறோம். நாட்டின் முன்னேற்றத்திற்கு பாரிய பங்களிப்பு செய்துவரும் இலங்கை மின்சார சபையானது மின்சார வசதியற்ற கஷ்டப் பிரதேசங்களுக்கும் மின் சக்தியை வழங்கிவருகிறது. எனவே மக்கள் மின்சாரத்தை சிக்கனமாகப் பாவித்து அதனைச் சேமிப்பதே இன்றைய காலத்தின் தேவையாகும். இலங்கையில் பெற்றோலியப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக மின்சார உற்பத்தியில் மின்சாரசபை பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கி வருகிறது. மின்சார உற்பத்திக்கு டீசல் அதிகமாகத் தேவைப்படுகிறது. இதன்காரணமாகவே மின்சார பாவனையை குறைக்குமாறு மின் பாவனையாளர்களிடம் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். (௧-7)

## வர்த்தகர்களிடம் பணம் கொள்ளை

மட்டக்களப்பில் முஸ்லிம் மீன் வர்த்தகர்கள் மூவரிடம் பணம் கொள்ளையடிக் கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பு புன்னைக்குடா தளவாய் வீதியில் 83,900 ரூபாய் மற்றும் செல்லிடப் பேசிகளை ஆயுதக்கும்பல் ஒன்று கொள்ளையடித்துச் சென்றதாக அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை காலை 7 மணியளவில் இக் கொள்ளைச் சம்பவம் நடந்ததாக முறைப் பாடு செய்துள்ளார். மட்டக்களப்பு மற்றும் ஏறாவூரில் அண்மைக் காலமாக இத்தகைய கொள்ளைச் சம்பவங் கள் அதிகரித்துள்ளன. கடந்த யூன் 8 ஆம் திகதி ஏறாவூர் பிரதேசத்திற்குட்பட்ட இராமநாதன் சண்முகலிங்கம் என்பவரது நகைக்கடை உடைக்கப்பட்டு நகைகளும் பணமும் கொள்ளையடிக்கப்பட்டன. யூன்10 ஆம் திகதி உலகசேகரன் சசிகரனின் நகைக் கடை உடைக்கப் பட்டு10 இலட் சத்து 45ஆயிரம் ரூபா மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது. (து)



**அருள் மிகு சுன்னாகம் மயிலணி கந்த சுவாமி கோவில் மஹோற்சவம்**



**5ஆம் நாள் 25.06.2006**
**(ஆறுமுகசுவாமி நடனம்)**



**சேயவனே நீ அருள்க!**

*கொற்ற தமிழ்க் கடவுள் கோலமா மயிலேறி*
*மற்றைத் திருநகரம் மயிலணியி லேயமர்ந்தார்*
*நற்றம் மிகுந்துலகு நவல்ந்து சிறந்திடவே*
*செற்றஞ் செகதமிடச் சேயவனே நீயருள்வாய்!*

இயல்வாணன்


# இராசிபலன்

**25.06.2006**
**(ஆனி 11, ஞாயிற்றுக்கிழமை)**
**அமாவாசை முன்னிரவு 10.10 மணிவரை**
**மிருகசீரிடம் பிற்பகல் 4.16 மணிவரை**
**இராகுகாலம் 4.25-5.55மணிவரை**
**சுபநேரம் 5.55-10.25 மணிவரை**
**அமாவாசை விரதம்**

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள சேர்க்கை, பிரயாணம், செல்வாக்கு |
| இடபம் | வேலைச்சுமை, அதிகசெலவு, கோபப் படுதல், முயற்சி தாமதம். |
| மிதுனம் | நலலமுயற்சி, தொழில்சிந்தை, கற்பனை மிகுதி, உறவினர் சந்திப்பு. |
| கடகம் | காரிய அலைச்சல், வீண்செலவு, உறவினர் வெறுப்பு, சயனசுகக் குறைவு. |
| சிங்கம் | காரிய அனுகூலம், உற்சாகம், பெருமை யடைதல், சுயபொருள் சேர்க்கை. |
| கன்னி | பிறர் உதவி, மேன்மை, தொழில் நன்மை, காரிய சித்தி. |
| துலாம் | புதிய திட்டமிடல், சரீரப் பிரயாசை, பிதா சிந்தை, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | பிரயாண பயம், ஆரோக்கியக் குறைவு, திடீர் நன்மை, உறவினர் வெறுப்பு. |
| தனுசு | நண்பர்கள் சந்திப்பு, செல்வாக்கு, காரிய அனுகூலம், தனவரவு. |
| மகரம் | தொழில் நன்மை, பகைவர் நேசம், முயற்சி கைகூடும், ஆரோக்கியம். |
| கும்பம் | உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம், பணவிரயம், சயனசுகக்குறைவு. |
| மீனம் | ரோகநிலை, முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம், மாதாசுகம். |

- வளவன்

# நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு சீமெந்தை விற்கவேண்டும்!

## யாழ்.வணிகர் கழகம் அறிவிப்பு

யாழ்ப்பாணத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக சீமெந்து விற்பனை செய்யும் வர்த்தகர்கள் பற்றிய தகவல்களை பொதுமக்கள் வழங்கினால் அந்தப் பணம் மீளப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப் படும் என யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வணிகர் கழ கம் விடுத்த செய்திக் குறிப்பில், தற்போதைய அசாதாரண சூழ் நிலையில் சீமெந்து எடுத்து வரு வதில் ஏற்படும் தாமதத்தைக் கருத் திற்கொண்டு தொக்கியோ கினோடி சீமெந்தின் ஆகக் கூடிய சில்லறை விற்பனை விலை 750ரூபா என வும் தொக்கியோ மிற்சுமி சீமெந் தின் ஆகக்கூடிய சில் லறை விற்பனை விலை 800ரூபா எனவும் தீர்மானிக்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட இவ் விலையி லும் பார்க்கக் கூடிய விலைக்கு சில வர்த்தக நிறுவனங்கள் குடாநாட் டில் சீமெந்தினை விற்ப தாக பொது மக்கள் எமக்கு முறைப்பாடு செய் துள்ளனர்.

ஆகவே இவ்வாறு பொது மக்கள் பாதிக்கப் பட்டிருப்பின் யாழ். வணிகர் கழகம், இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்எனும் முகவரிக்கு குறிப்பிட்ட வர்த்தக நிலையத்தின் பற்றுச்சீட்டுடன் எமக்கு எழுத்து மூலம் முறையிட்டால் கூடுதலாக அவர்கள் செலுத்திய தொகையை அவ்வர்த்தக உரிமையாளரிடமிருந்து பெற் றுத் தருவதற்கு நடவடிக் கைஎடுக் கப்படும் என்பதனை பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு வரு கின்றோம். இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் வேண்டப்படு கிறது என் றுள் ளது. (௧-7)

# அல்லைப்பிட்டிக்கு மின்சார வசதி

அண்மையில் அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தை யடுத்து அவ்விடத்திலிருந்து இடம்பெயர்ந்து நாவாந்துறை புனித நிக்கலஸ் தேவாலயத்திலும், யாழ்.அடைக்கல மாதா தேவாலயத்திலும் தனியார் வீடுகளிலும் தஞ்சமடைந்திருந்த மக்களை ஈ.பி.டி.பி.செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேரில் சந்தித்து உரையாடியதுடன் அவர்கள் கோரிக்கைகள் தொடர்பாக உடன் நட வடிக்கை எடுக்குமாறு அதிகா ரிகளுக்கு பணிப்புரை வழங்கினார் எனத் தெரிகிறது. இதையடுத்து அல்லைப்பிட்டி மக்கள் படிப்படியாகத் தமது சொந்த இடங்களில் குடியேற ஆரம்பித்துள்ளனர். அமைச்சரின் பணிப்புரைக்க மைய அம் மக்களின் மீள்குடியேற்றத்துக்கான சகல ஏற்பாடுகளையும் வசதிகளையும் அரச அதிகாரிகள் மேற் கொண்டு வருகின்றனர். மீளக்குடியமர்ந்துள்ள அல் லைப் பிட்டிப் மக்களுக்கு துரித கதியில் மின்சார வசதியை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள் ளதாகவும் தெரிகிறது. (து)



# தொடர்ச்சியாக 8 வருடங்கள்!

தொடர்ந்து வெற்றிப்பாதையில் படிப்படியாக முன்னேறிச் செல்லும் நாம் "இலங்கையின் மிகச்சிறந்த வங்கி" என அடுத்தடுத்து 8 ஆண்டுகளாக நியோர்க்கின் புகழ்பெற்ற சஞ்சிகையான குளோபல் .'பினான்ஸினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளோம்.

வருடாவருடம் இலங்கையின் வங்கித்துறையில் இவ்விருதை நாம் தொடர்ந்து பெறுவதற்கு. நீங்கள் எம்மீது வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையும், நீங்கள் வழங்கும் உந்துசக்தியுமே எமக்கு உறுதுணையாக இருந்தது.

ஆகவே, இந்த முக்கியமான வேளையில் உங்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூறுவதுடன், எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கொமர்ஷல் வங்கி

(C. அ-386)

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த வருடம் (2005) நடைபெறவேண்டிய திணைக்களத்தினால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சைகள் மிக விரைவில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே இறுதிப் பரீட்சைக்கு தோற்றவேண்டிய மாணவர்கள் பரீட்சைக்கு உடன் ஆயத்தமாகுமாறு தொழில்நுட்பக் கல்லூரி அதிபரால் கேட்கப்பட்டுள்ளது. (க)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பக் கல்லூரியில் எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி முதல் விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன.

எனவே மாணவர்களை அன்றைய தினம் முதல் விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (க)

## விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

சமூக நலத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள வலுவிழந்தோருக்கான சித்திரம், ஓவியம், சிற்பம் போன்ற பயிற்சிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

17 வயதுக்கு மேற்பட்ட 25பேர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

நாளொன்றிற்கு 75ரூபா வீதம் படி வழங்கப்படுவதுடன் பயிற்சி நிறைவின் பின் சான்றிதழ், உபகரணங்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

சுயமாக தயாரித்த விண்ணப்பங்களை தென்மராட்சி பிரதேச செயலகம் ஊடாக அனுப்பி வைக்கும்படி தென்மராட்சி பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (க-29)

## கூட்டம்


(சாவகச்சேரி)

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் 66ஆவது பொதுக் கூட்டம், சங்க மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பி.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது. (க-29)

## மக்கள் விசனம்

தென்மராட்சி பகுதியில் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படும் நிலை காணப்படுகின்றது. இதனால் மின்சார உபகரணங்கள் பழுதடைந்து வருவதாக இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (து-37)






பாலர் கல்விக் கழகத்தின் 'பாலர் தோத்திரத்திரட்டு' நூல் வெளியீட்டு விழா கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழகச் செயலாளர் திருமதி தெய்வநாயகி இரத்தினகோபால் மங்களவிளக்கேற்றுவதையும், நூலாசிரியர், கழக ஆசிரியைகள் அருகில் நிற்பதையும் முதல் படத்தில் காணலாம்.

வெளியீட்டு நூலின் முதற்பிரதியினை சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளையிடமிருந்து வலம்புரி நிர்வாக இயக்குநர் வெற்றிவேலாயுதம் பெற்றுக்கொள்வதனை இரண்டாவது படத்தில் காணலாம்.

(படங்கள் :- அலுவலக நிருபர்)

## கோப்பாய் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு விரைவில் மதிய உணவு

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கு உலக உணவு நிறுவனம் சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது.

இத்திட்டத்தின் மூலம் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஒன்பது வரை யுள்ள மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படவுள்ளது.

இதற்கான சமையல் உபகரணத் தொகுதியை பாடசாலைகளுக்கு வழங்க சலக ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதுடன் விரைவில் மதிய உணவு வழங்குவது குறித்த சகல அறிவுறுத்தல்களும் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்மாதிரியாக கோப்பாய் கோட்டப் பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்ட போதிலும் இத்திட்டமானது வெற்றியளிக்கும் பட்சத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் விரிவுபடுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தின் மூலம் மாணவரின் வரவு அதிகரிக்கும்.

அத்துடன் மாணவர்களுக்கு உடல், உள அபிவிருத்தியும் ஏற்படும். இதன் மூலம் கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என இத்திட்டத்தை அமுல்படுத்தும் உலக உணவு நிறுவனம் எதிர்பார்க்கின்றது. (க-136)

## இன்று ஒரு தகவல்

# வாழ்வின் இயல்பு

கிரேக்கதேசத்தில் ஒரு ராஜா இருந்தார். ஒரு மாதிரியான ராஜா பிடிவாதக்குணம் பைத்தியக்காரத்தனம் இரண்டும் அவரிடம் உண்டு. அந்த மன்னரிடம் ஓர் அழகான கட்டில் தங்கத்தால் செய்யப்பட்டது. விலை உயர்ந்த வைரங்களை அதில் பதித்து வைத்திருந்தார்கள். அதில் மரமே கிடையாது எல்லாம் தங்கம்... வைரம்.... வைடூரியம்... அவ்வளவு விலை உயர்ந்த கட்டில் வேறு எங்கும் கிடையாது வேறுயாரிடமும் கிடையாது அப்படிப்பட்ட அபூர்வ கட்டில் அந்த ராஜா தனக்கென்று சில கொள்கைகளை வைத்திருந்தார். அரண்மனைக்கு யாராவது முக்கியமான விருந்தினர்கள் வந்தால் அவர்களை அந்தக்கட்டில் படுக்க வைப்பார். ஆனால் ஒன்று வரும் விருந்தினரின் உயரம் அந்தக்கட்டிலின் நீளத்திற்கு சரியாக இருக்கவேண்டும். கூடக்குறைவாக இருக்கக்கூடாது. அப்படி ஒரு ஒழுங்கு முறையை அவர் எதிர்பார்ப்பவர் யாராவது ஒரு விருந்தினர் வந்தால் அன்றிரவே அந்த கட்டிலில் படுக்க அனுமதிப்பார்.

வரும் ஆசாமி அந்தக் கட்டிலை விட நீளமாக இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள் கட்டிலுக்குத் தகுந்த மாதிரி காலை வெட்டி விடச் சொல்வார். ஏனென்றால் அந்தக் கட்டில் விலை உயர்ந்தது. அதை மாற்ற முடியாது. அதனால் கட்டிலுக்குத் தகுந்தமாதிரி ஆளை மாற்றிவிடுவார் அங்கே கட்டில்தான் முக்கியம் மனிதன் முக்கியமில்லை அப்படித்தான் பல சமயங்களில் நமக்கு வாழ்வு முக்கியமாகத் தெரிவதில்லை சட்டதிட்டங்கள்தான் முக்கியமாகத்தெரியும்.

பொதுவாக ஒரு அளவை வைத்துத்தான் கட்டில் தயாரிக்க முடியும். ஒரு சராசரி மனதனின் அளவு அது சராசரி என்பது உதாரணத்துக்கு... பத்துப் பேரின் உயரத்தைக் கட்டி பத்தால் வகுத்துவரும் எண் கணக்கில் ஒரு கற்பனைவடிவம் அது அந்த வகையில் தான் அந்தக் கட்டில் தயாரிக்கப் பட்டிருக்கிறது. ஆனால சராசரி உயரமுள்ள மனிதன் என்பது கணக்கில் வேண்டுமானால் இருக்கலாம். நடைமுறையில் இருக்கமுடியாது அது கணக்கில் ஏற்பட்ட ஒரு கற்பனை அளவு அந்தக்கற்பனை அளவுக்கு நூறு சதவ்தம் சரியாக ஒரு விருந்தாளி வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியாக இருக்குமா?

சா!அந்தக் கட்டிலை விட நீளம் குறைவாக அதாவது உயரம் குறைவான ஒரு ஆசாமி வந்து விடுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள் அப்போதும் அந்த ராஜா சும்மா இருக்கமாட்டார். அதற்கென்றே அரண்மனையில் சில பலசாலிகளை வைத்திருக்கிறா அவர்களை அழைத்து வந்து விருந்தாளியின் கைகால்களைக் கட்டிவிடுவார்.

தலைப்பக்கம் நான்கு பேர், கால் பக்கம் நான்கு பேர் அவரைப் பிடித்து பலங்கொண்ட மட்டும் இழுக்கச் சொல்வார் கட்டிலின் அளவுக்கு சரியாகப் பொருந்தும் அளவுக்கு நீட்டச் சொல்வார். உடம்பு என்ன கம்பியா? தட்டி நீட்டுவதற்கு? வரும் விருந்தினர் நல்ல முறையில் படுத்து ஆனந்தப்படவேண்டும் என்று தான் அந்த ராஜா நினைக்கிறார் ஆனால் கட்டிலுக்குத் தகுந்தமாதிரி அவரது நீளம் இருக்கவேண்டும் என்று நினைப்பதனால் எவ்வளவு இடைஞ்சல் இது அரசனின் தவறில்லை ஒழுங்குமுறையின் தவறு என்கிறார் ஒரு பெரியவர்.

வாழ்வை நெறிப்படுத்துவது என்பது வேறு. கட்டுப்படுத்துவது என்பது வேறு. ஒழுங்கு முறையைத் திணிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு பல பேர் வாழ்வையே இழந்து விடுகிறார்கள். வாழ்வின் இயல்பு ஆனந்தம் மகிழ்ச்சி...! அந்த மகிழ்வை அடைய வேண்டும் என்றால் திறந்த மனதோடு செயல்படவேண்டும். இது தெரியாததனால் நம்மில் பலர் வாழ்வின் முக்கியமான சில பகுதிகளை இழந்து விடுகிறோம்.

நம்மில் சிலர் வேறுமாதிரி ஒரு மருந்துவமனையில அறுவை சிகிச்சை நடந்து முடிந்தது. அதன் பின்பு தான் ஒரு தாதி அவசரமாக ஓடிவந்து சொன்னார். "டாகடர் இந்த நோயாளிக்கு காலில்தான் கட்டி ஆனால் நீங்கள் மூளையில் கட்டி என்று நினைத்து தலையில் அறுவை சிகிச்சை செய்துவிட்டீர்கள் மூளை ஒப்பரேஷன் செய்யவேண்டியநோயாளி 15 ஆம் இலக்க கட்டிலில் இருக்கிறார்" என்றார்.

டாகடர் பார்த்தார் "பரவாயில்லை... அதனால் என்ன கட்டிலை மாத்திவிட்டால் சரி இவரைக் கொண்டு போய் 15ஆம் இலக்க கட்டிலில் போடு சரியாகிவிடும்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சுயமாகத் தீர்மானிக்கக் கூடிய ஆளுமை அற்றவர் மஹிந்த

## அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு தெரிவிப்பு

(கொழும்பு)

எந்த ஒரு பிரச்சினையிலும் சுயமாகத் தீர்மானிக்கக் கூடிய ஆளுமை ஏதுமற்றவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்று மூத்த அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு சாடியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் உத்தியோகப் பூர்வ வானொலியான புலிகளின் குரலில் ஒலிபரப்பாகிய கருத்துப் பகிர்வு நிகழ்ச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

மஹிந்த ராஜபக்ஷவின் கதிரை இப்போது ஆடத் தொடங்கிவிட்டது. யார் ராஜபக்ஷவை கதிரையில் உட்கார வைத்தார்களோ அவர்களே கதிரையை ஆட்டவும் தொடங்கி விட்டனர்.

உண்மையான செயல்பூர்வ அர்த்தத்தில் ராஜபக்ஷவை கதிரையில் அமர்த்திய முதலாவது அணியினர் தமிழீழ விடுதலைப் புலிகள் தான் இரண்டாவது அணியினர் தான் ஜே.வி.பி. ஜே.வி.பியினர் ராஜபக்ஷவோடு தோளோடுதோள் கை கோர்த்துநின்று கதிரைக்கு அழைத்து வந்தனர். ஆனால் ராஜபக்ஷவை விடுதலைப் புலிகள் கதிரைக்கு அழைத்து வந்த விதமோ மிகவும் விநோதமானது உண்மையிலேயே அவர்கள்தான் அதனை சாத்திய மாக்கியவர்களும் கூட.

ராஜபக்ஷவுடன் சேர்ந்து அவரை கவிழ்ப்பதற்காக கூட்டுச் சேர்ந்தவர்கள் ஜே.வி.பியினர் ராஜபக்ஷவுடன் சேர்ந்து அவருக்கு மேலாக வளர முற்பட்ட சக்தியினர். விடுதலைப் புலிகளைப்பொறுத்தவரையில் அவர்களது நோக்கு நிலையும் தந்திரோபாயமும் வேறானதாக இருந்தது. மனதால் எதிரியாக இருந்தாலும் செயலால் ராஜபக்ஷவை கதிரையில் அவர்கள் அமர்த்தினர். இப்போது இந்த இரு எதிரிகளும் கதிரையை ஆட்டத் தொடங்கி விட்டனர்.

ராஜபக்ஷவின் சுயமான ஆளுமையானது கதிரையில் அவரை எவ்வளவு காலத்துக்குத் தாக்குப் பிடித்திருக்க வைத்திருக்கும் என்பது ஒரு கேள்வி. சீர்கெட்டிருக்கும் அரசியல் பின்னணியில் ராஜபக்ஷவின் ஆளுமையானது எத்தகைய பாத்திரத்தை வகிக்க வல்லது என்பதை எடைபோடுவது அவசியமாகும்.

ஏனெனில் அவருக்கு ஊடாக தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அவரே,அந்தக் கதிரையில் இருந்து தீர்மானங்களுக்கு பொறுப்பானவராகவுள்ளார். தான் கதிரையில் அமர்வதற்கு செய்யக்கூடிய எல்லா உத்திகளையும் அவர் செய்யத்தொடங்கினார். அதில் ஒன்று தான் அவரது மஹிந்த சிந்தனை என்கிற தேர்தல் விஞ்ஞாபனமாகும். உண்மையில் மஹந்த சிந்தனை என்பது கால கட்டத்தேவைகளுக்கு சற்றுப் பொருத்தமில்லாத ஒன்று அது வெற்று வேசகோசமாகும். அந்த வெற்று வேசகோசமானது செயல்பூர்வ அர்த்தத்தில் எத்தகைய பாத்திரத்தையும் வகிக்க முடியாது.

மஹிந்த சிந்தனை என்கிற அதனடிப்படையில்தான் தான் கதிரையில் அமருவதற்கான அடித்தளத்தை சிங்கள மக்கள் மத்தியில் அவர் உருவாக்கினார். ராஜபக்ஷ பதவிக்கு வந்தபோது அவரது பிறந்தநாள் பரிசாக ஜனாதிபதி பதவி கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அந்த பிறந்த நாள் பரிசை உண்மையில் விடுதலைப் புலிகள் தான் கொடுத்தனர். ஆனால் இப்போது அந்த பிறந்தநாள் பரிசையும் இலகுவில் தட்டிப் பறிக்கக்கூடிய வித்தைகளைக் கொண்ட வர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

இதுதான் வரலாற்றில் மிகவும் சுவாரசியமான எதிர் முரணாகும். ஒரு அரசைப் பொறுத்தவரையில் அதிகாரப் பூர்வமான வார்த்தைகளில் பார்ப்பதானால் அந்த நாட்டின் தலைவராக காணப்படுகிற ஜனாதிபதி அல்லது தீர்க்கமான தலைவராகக் காணப்படுகிற பிரதமர் என்பவர் தான் முக்கியமானபாத்திரம் உள்ளவர்களாகக் காணப்படுவர். ஜனாதிபதியையும் பிரதமரையும் விட இராணுவத் தளபதிதான் அந்நாட்டின் பாதுகாப்புக்கும் பாதுகாப்பின் பேரலான மிடுக்குக்கும் பொறுப்பானவர்.

ஜனாதிபதி பதவியேற்கும் போது முப்படைமற்றும் பொலிஸாரால் அரணமைக்கப்பட்ட நிலையில்தான் பதவி யேற்கிறார் அப்படியென்றால் ஆயுதப் படையினர் மிகவும் முக்கிய சக்தியானவர்கள். இலங்கையில் மிகவும் பிரதானமாக இருப்பது இராணுவமாகும் அந்த இராணுவத் தளபதியினது மிடுக்கும் ஓர்மமும் அரசியலில் ஒரு காத்திரமான பாத்திரத்தை வகிக்க வல்லது.

இப்பின்னணியில்தான் ஜனாதிபதியும் தனது மிடுக்கை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார். இப்போது அந்த தளபதியினது வீழ்ச்சியானது தாக்குதல் மூலம் அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியானது ஜனாதிபதியை ஓரளவு செயலற்ற நிலைக்கே தள்ளியுள்ளது.

அந்த இராணுவத் தளபதியின் வீழ்ச்சியை குறியீட்டு அர்த்தத்தில் எடுத்துக்கொள்வோம். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் தன்னுடன் உரையாடிய பலரிடமும் ஜனாதிபதி ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார். முதலாவதாக பதவிக்கு வருவதுதான் பிரச்சினை என்றும் பதவிக்கு வந்தால் தன்னால் பிரச்சினையைக் கையாள முடியும் என்றும் நம்பிக்கையை வெளியிட்டிருந்தார்.

ஒரு வகையில் அவரிடம் கற்பனை இருக்கவே செய்தது. பதவிக்கு வந்த பின்பு ஜே.வி.பியினரையும், விடுதலைப் புலிகளையும் தன்னால் இலகுவாகக் கையாண்டு விட முடியும் என்று அவர் நம்பினார். ஆனால் யதார்த்தம் அதற்கு நேர் முரணாகவே இருக்கிறது. ராஜபக்ஷ பதவிக்கு வந்தபோது இருந்த கற்பனை நடைமுறையில் சாத்தியமற்றதாகவே காட்சியளிக்கிறது. அவரது மஹிந்த சிந்தனை என்பது எவ் விதமான திட்டமுமில்லாத முழு நீளமான கற்பனாவாதமாக கணப்படுகிறது. அவர் இப் போது எதுவித அரசியல் பொருளாதாரத்திட்டத்தை கொண்டிருக்கவில்லை அதற்கான நடைமுறையையும் கொண்டிருக்கவுமில்லை இப்படியான ஒரு தலைவன் நாட்டுக்கு இருக்க முடியாது.

ராஜபக்ஷவிடம் இலங்கைத் தீவு பற்றிய எது வித மான பார்வையும் இல்லை அவர் பதவிக்கு வந்தபோது அவரைச் சுற்றி ஒரு ஒளிவட்டம் படர்ந்திருந்தது. உண்மைதான் ஆனால் அந்த ஒளிவட்டம் மிக விரைவில் கரைந்து போய்விட்டது. அவர் தன்னைச் சூழ்ந்திருக்கக் கூடிய ஒளிவட்டத்தைக் காப்பாற்றக்கூடியதிட்டத்தையும் ஆளுமையையும் அவர் கொண்டிருக்கவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பதில் தீர்க்கமான போக்குகளை அவர் கொண்டிருக்கவில்லை என்பதும் அவர் இயல்பில் சுயமாகத் தீர்மானம் எடுக்கக் கூடிய திறமையற்றவராகவே அவர் எப்போதும் காணப்பட்டிருக்கிறார். அவர் வாழ்நாளில் சுயமாகத் தீர்மானமெடுத்து அரசியல் ரீதியாக திட்டங்களை நிறைவேற்றியவராக இல்லை இனியும் அவரால் சுயமாக ஒரு திட்டத்தைத் தீர்மானித்து சுயமாக நிறைவேற்ற முடியும் என்பது முடியாதது.

எதிர்காலப் பார்வை ஏதுமற்ற ஒரு தலைவனாகவே ராஜபக்ஷ எம்முன் காடச்சியளிக்கிறார். எந்த ஒரு பிரச்சினையையும் கையாளக்கூடியவராக அவர் இல்லை என்பது அவரைச் சூழ்ந்திருப்பவர்கள் கண்டுகொள்கிறார் கள். உண்மையிலே அவரின் அடிப்படை எதிரிகளாக ஐக்கிய தேசியக்கட்சியினரும், சந்திரிகா அணியினரும், ஜே.வி.பியினரும் கட்டங்களைப் பயன்படுத்தி தம்மை முன்நிறுத்தத்தொடங்கிவிட்டனர். ராஜபக்ஷவைப் பொறுத்தவரை நான்கு முனைகளிலும் அவருக்கு எதிரிகள் உள்ளன. நண்பர்கள் எவரும் இல்லை ஒரு புறம் புலிகள். மாற்றுக் கருத்துக்கு இடமற்ற விட்டுக்கொடுக்கப் படமுடியாத உரிமைகளின் பொருட்டு அவர்களின் நிலைப்பாடு உறுதியான தளத்தில் செயற்படத் தொடங்கியிருக்கிறது. மறுபக்கம் ஜே.வி.பியினர்.

சூழலைப் பயன்படுத்தி பிரச்சினைகளைக் கிளறி அவற்றின் மூலம் தம்மை வளப்படுத்துவதற்கான வாய்ப்புக்களைத் தேடுகின்றனர். இந்தப் பின்னணியில் ஐக்கிய தேசியக்கட்சியினரும் தீர்வுத் திட்டம் தொடர்பிலான செயற்பாடுகளில் பங்கேற்பதில்லை என்று தெரிவித்து விட்டனர்.

மறுபக்கமாக அரசாங்கத்தின் மீதான தாக்குதலை புரிந்துள்ளனர். சுதந்திரக் கட்சியில் தலைமைக்காகப் போராடுவதற்காக பண்டாரநாயக்க குடும்பம் புறப்பட்டு விட்டது. சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை சந்திரிகா இன்னமும் விட்டுவிடவில்லை சந்திரிகா இப் போது ஒரு பதவியிலும் இல்லாமல் இருக்கலாம் அதாவது அரசியலில் தீர்மானம் எடுக்கக்கூடிய அமைச்சுப் பதவியோ நாடாளுமன்றப் பதவியோ இல்லாமல் இருக்கலாம்.

ஆனால் அவரை இன்றும் சிங்கள மக்கள் தேசிய சின்னமாகக் கருதுகின்றனர். ராஜபக்ஷவின் செயற்பாடுகள் காத்திரமானதாக இல்லாதபோது இலங்கைத் தீவு நெருக்கடிக்குள்ளகிறபோது தங்கள் கட்சிக்குள் இன்னொரு காத்திரமான தலைவராகக் காணக்கூடிய சந்தி ரிகா தொடர்ந்தும் இருக்கிறார். அப்படியென்றால் ராஜபக் ஷவை பொறுத்தவரையில் முடிவடையாத உட்கட்சிப் போராட்டத்தில் இழுத்துவிடப்பட்டுள்ளார். உள்நாட்டு, வெளி நாட்டு சிக்கல்களுக்குள்ளும் மாட்டுப்பட்டுள்ளார். இப்பின்னணியில் இலங்கைத்தீவின் அரசியல்மேலும் மேலும் சீரழிந்து குழப்பகரமானதாகவே இருக்கக்கூடிய தாகவும் உள்ளது என்றார். (கு)

## பிரதேச செயலகங்களில் கணனி நடவடிக்கைப் பிரிவு

(கொழும்பு)

அரச சேவைகளை செயற்திறன் வாய்ந்தவையாக மாற்ற வழிவகுக்கும் விதத்தில் இலங்கை தகவல்தொழில்நுட்ப சேவை என்ற புதிய வேலைத்திட்டம் அறிமுகம் செய்யப்படுமென பொதுநிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தின் சமகால வளர்ச்சியை பொதுநிர்வாகத்தில் பயன்படுத்துவது திட்டத்தின் நோக்கமாகும்.

இது குறித்து பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம கருத்துத்தெரி விக்கையில், இந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் கணனி நடவடிக்கைப் பிரிவு ஸ்தாபிக்கப்படுமென்று தெரிவித்தார்.

போட்டிப் பரீட்சைகளை நடத்தி தகுதியானவர்களைத் தெரிவு செய்து இந்தப் பிரிவுகளில் நியமிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

## பலாப்பழத்தின் விலை வீழ்ச்சி

சாவகச்சேரி நவீன சந்தையில் பலாப்பழத்தின் விலை வீழ்ச்சியடையந்து காணப்படுகின்றது. இதன்படி ஒரு பலாப்பழத்தின் விலை 50 ரூபாமுதல் 100 ரூபாவரை விற்கப்படுகின்றது. இதேவேளை மாம்பழம் ஒன்று 15 ரூபா முதல் 20 ரூபா வரை விற்கப்படுகின்றது. (க-37)

# நோயை வளர்த்து உயிர் பறிக்கும் போதைப் பொருள் பாவனை !

நோயற்ற வாழ்வே உலகின் உயர்வான கம். எனவே இந்த சுகத்தை நாம் எல்லோம் அனுபவிக்க வேண்டுமாயின் போதைப் பாருட்களை நாம் நாடக் கூடாது.

போதைப் பொருட்கள் ஒரு மனிதனின் னநிலையை மாற்றி மகிழ்வு நிரம்பிய மன றைவுள்ள நிலையைக் கெடுக்கக் கூடியதும், னிதனின் தனித்தன்மை யை அழிக்கக் கூடியதும் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடியதுமான இயற்கையாகப் பெறப்படுகின்ற அல்லது செயற்கையாகத் தயாரிக்கப்படுன்ற இரசாயனப் பொருளே என வைத்திய லாநிதிகள் கருதுகின்றனர்.

இலங்கையில் பெருமளவில் பாவிக்கப்படுன்ற போதைப் பொருட்களாக அபின், ஞ்சா, கெரோயின் போன்றன காணப் படுன்றன. பொதுவாக போதைப் பொருட்களை வாய்மூலம் உட்கொள்ளல், ஊசி மூலம் டலில் செலுத்துதல், புகையிலையுடன் இணைத்துப் புகைத்தல், நுகர்தல் போன்ற ல்வேறு முறைகளில் பாவிக்கின்றனர். பாவிக்கும் போதைப் பொருட்களுக்கு ஏற்ப இந்த முறைகள் மாற்றப்படுகின்றன.

குடி குடியைக் கெடுக்கும் என்றொரு பழமொழி உண்டு. இது எல்லோருக்கு தெரிந்த ஒன்றாகும். உறவுகளைப் பறித்து சொத்துசுகங்களை நடு வீதிக்குக் கொண்டுவந்து விடுவதுதான் மது.

பொதுவாக மதுபானம் அருந்துதல்-போன்ற தவறான பழக்கவழக்கங்களை உடைய ஆண்களாலேயே எமது சமூகத்தில் பிரச்சினைகள் தலைவிரித்து ஆடுவதைஎம்மால் அவதானிக்க முடிகின்றது. நாம் நேசிக்கும் மனைவி பிள்ளைகளை மற்றும் தாய் தந்தையரை துச்சமாக கருதும் அளவிற்கு மது அவர்களை ஆட்சிபுரிகின்றது. சிலவேளைகளில் குடும்ப உறவுகளை துன்புறுத்துவதுடன் கொலையையும் செய்யும் அளவிற்கு தூண்டுவதுதான் மது.

போதைப் பொருட்கள் ஆபத்தானவை. ஒரே ஒருமுறை போதைப் பொருளை உபயோகித்து அதில் என்ன இருக்கின்றது என்று பார்க்கலாம் என்று ஆரம்பித்தவர்கள் நாளடைவில் போதைப் பொருட்களுக்கு அடிமையாகிவிடுகின்றார்கள். போதைப் பொருட்களை பயன்படுத்தும் எல்லோருக்கும் இந்நிலைதான் ஏற்படுகின்றது. போதைப் பொருட்கள் தனக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று உணரும்போது அவன் அதிலிருந்து விடுபட நினைக்கின்றான். ஆனால் அவனால்

## நாளை போதைப் பொருள் எதிர்ப்பு தினம்

முடிவதில்லை. அவன் போதைப் பொருட்களை பயன்படுத்துவதை நிறுத்தியவுடன் அவனுக்கு பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. படபடப்பு, மனச்சோர்வு, மூட்டுகளில் வலி என ஏற்படுகின்றது. மேலும் உபயோகிக்கும் போதைப்பொருட்களின் வகையைப் பொறுத்து பாதிப்புகள் ஏற்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளே அவன் போதைப்பொருட்களைவிடுவதற்கு பெரும் தடையாகவுள் ளது.

போதைப் பொருட்கள் என்பன யாவை? அவை என்ன செய்கின்றன? மனநிலையில் உணர்வுகளில் நடத்தையில் மாற்றம் ஏற்படுத்தும் பொருட்கள் போதைப்பொருட்கள் என்று சொல்கின்றோம். சில பொருட்களுக்கு மருத்துவ ரீதியான பயன் உண்டு. உதாரணமாக தூக்கமாத்திரை, இருமலுக்குரிய மருந்து, வலிக்கான மருந்து ஆகியவை மருத்துவ ரீதியாக பயன்படக் கூடியவை. இம் மருந்துகளை மருத்துவரின் ஆலோசனைப்படிதான் பயன்படுத்த வேண்டும். மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் பயன்படுத்தினால் ஆபத்து ஏற்படும். இதுதவிர மருத்துவத்திற்கு பயன்படாத சில போதைப் பொருட்களும் உண்டு.

கஞ்சா, பிரவுண் சுகர் ஆகியவை இந்தப் பிரிவைச் சேர்ந்தவையாகும். போதைப் பொருள்பாவனை மனிதனின் உடலில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பார்த்தால் மூளை, இருதயம், சுவாசப்பை, நரம்புமண்டலம், ஈரல், சிறுநீரகம், உடல் உறவு போன்றவற்றை பாதிப்புக்குள்ளாக்கின்றது. ஆனால் மதுவை சடுதியாகக் குறைக்கும்போது அல்லது முற்றாக நிறுத்தும் போது உடலில் சில உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

1.நடுக்கம்ஏற்படுதல் 2.நெஞ்சு படபடத்தல் 3.மிகையான வியர்வை சிந்துதல் 4.கை,கால்கள் நடுக்கம் ஏற்படுதல் 5. உயர் குருதி அழுத்தம் 6.ஓங்காளம் 7.வாந்தி ஏற்படுதல் 8.வலிப்பு ஏற்படுதல் 9.மறதி ஏற்படுதல் 10.சோர்வு, களைப்படு தல் 11.பார்வை மங்குதல், காதுகேட்பது குறைதல் போன்றவை ஏற்படும்.

எமது நாட்டை பொறுத்தமட்டில் தினமும் சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்க்ள் இலங்கைக்கு கடத்தப்பட்டு வருகின்றன என்று புள்ளிவிபரங்கள் எடுத்துக்கூறுகின்றன. இதனை தடுப்பதற்கும் போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கும் விசேட பிரிவுகளை ஏற்படுத்தி போதைப் பொருட்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் புதிய திட்டங்களை வகுக்கவும் போதைப்பொருள் விற்பனையை தடுக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும். மேலும் போதைப் பொருள்கடத்தல் வர்த்தகத்தின் பிரதான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இலங்கை அமைந்துள்ளதால் இலங்கையில் போதைப்பொருள் பாவனையாளர்களும் அதிகரித்துவிட்டனர்.

எமது நாட்டில் காணப்படும் போதைப் பொருள்பாவனையாளர்களை மூன்று வகையினராக உலக சுகாதார ஸ்தாபனமானது வகைப்படுத்தியுள்ளது. 25 வயது வரையானோர் இவர்கள் 37 வீதமாகக் காணப்படுகின்றனர். 26வயது தொடக்கம் 40 வயது வரையானோர் இவர்கள் 51 வீதமானோராக காணப்படுகின்றனர். 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் 11 வீதமா னோராகக் காணப்படுகின்றனர். இந்தத் தரவுகள் மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் எமது நாட்டில் 50 ஆயிரம் போதைப்பொருள் பாவனையாளர்கள் காணப்படுவதாகவும் அதிலும் கொழும்பு மாநகரப் பகுதியில் மாத்திரம் 10ஆயிரம் பேர் காணப்படுவதாகவும் புள்ளிவிபரங் கள் கூறுகின்றது. போதைப்பொருள் பாவனையால் சமூகச் சீரழிவு செயல்களில் இளைஞர்கள் மட்டுமல்ல சமூகத்தின் அனைத் துத் தரப்பினரும் ஈடுபட்டு வருகின்றனர். படித்தவர்கள், வயோதிபர்கள், பாமரர்கள் இதனால் இவர்களுக்கு உளரீதியான தாக்கம் ஏற்படுகின்றது. ஆரம்பத்தில் பொழுது போக்காக போதைப் பொருட்களை பாவிக்கும் இவர்கள் நாளடைவில் அதற்கு அடிமையாகியும் விடுகின்றனர்.

மதுவானது புலனைப்பறிக்கும், நலனைப் பறிக்கும், நோயை வளர்க்கும், ஈற் றில் உயிரைக் குடிக்கும். ஒருவன் அருந்தும் மதுவில் 10 சதவீதம் சுவாசிப்பதன் மூலமும் வியர்வை மூலமும் சிறுநீர் கழிப்பதன் மூலமும் வெளியேறுகின்றன. மிகுதி 90சதவீதமும் இரத்தத்துடன் இரண்டு மணித்தியாலத்திற்குள் கலக்கின்றது .மேலும் கருவுற்ற பெண்கள் 3 மாதகால இடைவெளியில் மது அருந்தி வருவார்களானால் உடல் ஊன முற்ற பிள்ளைகள் பிறக்க அதிக வாய்ப்புண்டு என்று புள்ளி விபரங்கள் எடுத்துக் கூறுகின்றன.

செ.குமாரசிங்கம் J.P
செயலாளர்
வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்

எனவே மதுவிற்கு அடிமையாவதிலிருந்து விடுபடுவதற்கும் ஏற்ற சிறந்த சிகிச்சை முறையானது உளவியல் ரீதியிலான சிகிச்சை முறையாகும். இதற்குத் தகுந்த ஓர் மனோதத்துவ வைத்திய நிபுணரை அணுகி அவருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி முழுமனதுடன் சிகிச்சை பெறுவார்களானால் நிச்சயமாக அவர்கள் மதுவிலிருந்து விடுபடுவதுடன் வைத்திய ஆலோசனையின்படி மருந்துகளை பயன்படுத்தி வந்தால் மதுவில் இருந்து விடுபட்டு நற்பிரஜையாக மக்கள் மத்தியில் வாழ முடியும்.

# பூரண ஹர்த்தாலால் இயல்புநிலை பாதிப்பு


ஆளரவமற்ற மத்திய பஸ் நிலையம்...


வெறிச்சோடிக் கிடக்கும் மினிபஸ் தரிப்பிடம்...



பூட்டப்பட்ட கடைகளுக்கு பாதுகாப்பளிக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்...



பஸ் வருமெனக் காத்து நிற்கும் பயணிகள்...



கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு...



பூட்டப்பட்ட வங்கி....


ஆளரவமற்ற வின்சர் தியேட்டர் சந்தி...


விநியோகம் நிறுத்தப்பட்ட எரிபொருள் நிலையம்...


ஜனசந்தடியற்ற கஸ்தூரியார் வீதி...

படங்கள் திலக்




# ஹென்றி, வியரா அபார ஆட்டம் டோகாவை வீழ்த்தியது பிரான்ஸ்

ஹென்றி, வியரா இருவரின் அபார ஆட்டத்தால் டோகாவுக்கு எதிரான லீக் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வெற்றி பெற்றது. இதன்மூலம் உலககோப்பை தொடரின் இரண்டாவது சுற்றுக்கு பிரான்ஸ் முன்னேறியது. இத் தொடரின் மூன்றாவது லீக் போட்டி கோலக்னியில் நேற்று முன்தினம் நடந்தது. முன்னணி அணியான பிரான்ஸ் கடந்த இரண்டு லீக் போட்டிகளில் சமநிலையில் மட்டுமே பதிவு செய்திருந்தது. டோகா இரண்டு லீக்



போட்டிகளிலும் தோல்வி அடைந்திருந்தது.

இப்போட்டியில் பிரான்ஸ் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது. ஆட்டத்தின் 14ஆது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் தியரி ஹென்றி கொடுத்த சிறப்பான பாசை பெற்றுக்கொண்ட டேவிட் டிரஸ்கெட் அபாரமாக கோல் அடித்தார். ஆனால் நடுவர் அதை ஓவ்சைட் கோல் என அறிவித்தார். இதன்மூலம் பிரான்ஸின் முன்னிலை கனவு முறிந்தது. 17மற்றும் 22ஆவது நிமிடங்களில் கோல் அடிக்க முயன்ற பிரான்ஸின் முயற்சியை டோகா கோல் கீப்பர் கோசி அகசா தடுத்துவிட்டார்.

ஆட்டத்தின் 30ஆவது நிமிடத்தில் டோகாவுக்கு பிறி-கிக் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் டோகா வீரர்கள் நழுவ விட்டனர். முதல் பாதி போராட்டத்தில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. உலக கோப்பை தொடரின் இரண்டாவது சுற்றுக்கு பிரான்ஸ் தகுதிபெறுமா? எனஎண்ணிய ரசிகர்களுக்கு



ஆட்டத்தின் 55ஆவது நிமிடத்தில் பதில் கிடைத்தது. பிரான்ஸ் வீரர் பாட்ரிக் வியரா ஆட்டத்தின் முதல் கோல் அடித்து அதை உறுதிசெய்தார். பிராங்க் ரிபரி கொடுத்த அழகான பாஸ் பிரான்ஸின் வெற்றிக்கு வழி அமைத்துக் கொடுத்தது. வெற்றி பெற்று விடுவோம் என்ற மகிழ்ச்சியில் பிரான்ஸ் வீரர்கள் புதுத் தெம்புடன் விளையாடத் தொடங்கினர்.

ஆட்டத்தின் 61ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் நட்சத்திர வீரர் தியரி ஹென்ரி இரண்




டாவது கோல் அடித்து அசத்தினார். இறுதியில் பிரான்ஸ் 2-0 என்ற கோல் கணக்கில் தொடரின் முதல் வெற்றியை பதிவு செய்தது. இவ்வெற்றியின் மூலம் 5 புள்ளிகளுடன் உலக கோப்பை தொடரின் இரண்டாவது சுற்றில் நுழைந்தது பிரான்ஸ். மூன்று லீக் போட்டிகளிலும் தோல்வி அடைந்த டோகோ தொடரைவிட்டு வெளியேறியது.

**அமிர்தன்**

# சவுதி அரேபியாவை ஸ்பெயின் இலகு வெற்றி

சவுதி அரேபியாவுக்கு எதிரான லீக் போட்டியில் ஸ்பெயின் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஸ்பெயின் வீரர் ஜுவானிடோ அற்புதமாக கோல் அடித்து அணியை வெற்றிபெறச் செய்தார்.

இப்போட்டியில் தோல்வியடைந்த சவுதி அரேபியா இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்தது. குழு 'எச்' பிரிவை சேர்ந்த ஸ்பெயின், சவுதி அரேபியா அணிகள் மோதிய மூன்றாவது லீக் போட்டி நேற்று முன்தினம் கெய்சர்ஸ்லாடர்னில் நடந்தது.

முன்னதாக நடந்த இரண்டு லீக் போட்டிகளில் ஸ்பெயின் வெற்றிபெற்று 6 புள்ளிகள் பெற்று இருந்தது. சவுதி அரேபியா ஒரு சமநிலையை மட்டும் பதிவு செய்திருந்தது. இப்போட்டியில் வெற்றி பெறவேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது சவுதி அரேபியா.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் கோல் அடிக்க கடுமையாகப் போராடின. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் சவுதி அரேபிய வீரர் கால்டு அஜிசுக்கு காலில் தசைப் பிடிப்பு ஏற்பட்டது. அவருக்கு பதில் மாற்று வீரராக அல்டெம்யாட் களமிறங்கினார்.

16, 29மற்றும் 30 ஆவது நிமிடங்களில் ஸ்பெயினுக்கு கோல் அடிக்கும் வாய்ப்பு அமைந்தது. ஆனால் சவுதி அரேபிய கோல் கீப்பர் சயத், தனது துடிப்பான ஆட்டத்தால் தடுத்துவிட்டார். தொடர்ந்து போராடிய ஸ்பெயினுக்கு 36ஆவது நிமிடத்தில் பலன் கிடைத் தது. பிறி-கிக்கில் கிடைத்த வாய்ப்பை அன் டோனியா ரெய்ஸ் அடித்தார். அது கோல் லைனுக்கு மிக அருகில் வந்தபோது தலை யால் முட்டி அற்புதமாக ஆட்டத்தின் முதல் கோலை அடித்தார் ஸ்பெயின் வீரர் ஜுவானிடோ.

முதல் பாதியில் சவுதி அரேபியாவால் கோல் எதுவும் அடிக்க இயலவில்லை. இரண்டாவது பாதியிலும் ஸ்பெயினின் ஆதிக்கமே அதிகம் இருந்தது. ஆட்டத்தின் 50, 52ஆவது நிமிடங்களில் கோல் லைனுக்கு மிக அருகில் வாய்ப்பை இழந்தது ஸ்பெயின்.

நீண்ட நேரம் வாய்ப்பு கிடைக்காமல் இருந்த சவுதி அரேபியாவுக்கு 69ஆவது நிமிடத்தில் நல்லவாய்ப்புகிடைத்தது. ஆனால் ஹுசைன் சுலைமானி அதை நழுவ விட்டார்.

ஸ்பெயின் வீரர்களின் தடுப்பாட்டத்தால் சவுதி அரே பியாவின் கோல் கனவு கலைந்து கொண்டே வந்தது. பலமுறை வாய்ப்புகளை நழுவ விட்ட சவுதி அரேபியா கடைசி வரை கோல் அடிக்காமலேயே வெளியேறி யது. இறுதியில் ஸ்பெயின் 1-0 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்றது.

இவ்வெற்றியுடன் குழு 'எச்' பிரிவில் 9 புள்ளி கள் பெற்று ஸ்பெயின் முதலிடத்தைப் பெற்றது. 1 புள்ளி மட்டுமே பெற்றிருந்த அரேபிய அணி உலக கோப்பை தொடரில் இருந்து வெளியேறியது.

# செவ்சென்கோவின் அற்புத ஆட்டம் உக்ரைன் அபார வெற்றி

செவ்சென்கோவின் அற்புத ஆட்டம் கைகொடுக்க துனிசியாவுக்கு எதிரான லீக் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் உக்ரைன் வெற்றிபெற்றது. இவ்வெற்றியின் மூலம் உக்ரைன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது லீக் போட்டியில் குழு 'எச்' பிரிவை சேர்ந்த உக்ரைன், துனிசியா அணிகள் மோதின. முதல் இரண்டு லீக் போட்டிகளில் உக்ரைன் ஒரு வெற்றியையும் துனிசியா ஒரு சமநிலையையும் பதிவு செய்தன. இரு அணிகளுக்கும் இப்போட்டி முக்கியமான போட்டியாக அமைந்தது.

துனிசியாவுக்கு ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் பிறி-கிக் வாய்ப்பு கிடைத்தது. ஹமத் நமோசி அடித்த அந்த உதை கோல் லைனுக்கு மிக அருகில் வந்தது. ஆனால் உக்ரைன் கோல் கீப்பர் அலெக்சாண்டர் தடுத்துவிட்டார். 31ஆவது நிமிடத்தில் உக்ரைனுக்கு கிடைத்த கோனர் வாய்ப்பும் கைநழுவியது. துனிசியா வீரர் யசிரி இப்போட்டியில் சிவப்பு அட்டை பெற்று வெளியேறினார். முதல் பாதியின் கடைசி நிமிடத்தில்உக்ரைன் வீரர் அனடோலியை தடுக்க முற்பட்ட அவர் பலத்த காயமடைந்தா[...] இதன் காரணமாக நடுவர் ஜசிரியை போ[...]யிலிருந்து வெளியேற்றினார்.

முதல் பாதியில் இரு அணிகளும் கோ[...] எதுவும் அடிக்காமல் வெளியேறின. இர[...]டாவது பாதியில் உக்ரைனுக்கு அதிர்ஷ்ட[...] அடித்தது.

ஆட்டத்தின் 70ஆவது நிமிடத்தி[...] பெனால்டி ஏரியாவுக்குள் துனிசியா வீ[...] ஹரீம் ஹாகையின் தாக்குதலுக்கு உ[...]பட்ட செவ்சென்கோ கீழே விழுந்தார். இ[...]னால் உக்ரைனுக்கு பெனால்டி வழங்க[...]பட்டது. வெற்றிக்கு கிடைத்த வாய்ப்பி[...] கோல் அடித்து அசத்தினார் செவ்சென்கே[...] இதற்கு பதிலடி கொடுக்க நினைத்த து[...]சியாவுக்கு வாய்ப்புகள் ஒன்றும் அமை[...]வில்லை.

இறுதியில் உக்ரைன் 1-0 என்ற கோ[...] கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூல[...] முதல் சுற்றில் 6 புள்ளிகள் பெற்று இரண்[...]வது சுற்றுக்கு முன்னேறியது உக்ரை[...] மூன்று லீக் போட்டிகளின் முடிவில் 1 புள்[...] பெற்ற துனிசியா தொடரை விட்டு வெளி[...]றியது.

# தென்கொரியாவுடனான ஆட்டத்தில் சுவிற்சர்லாந்து அபார வெற்றி


தென்கொரியாவுக்கு எதிரான லீக் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் சுவிற்சர்லாந்து அபார வெற்றி பெற்றது. சுவிற்சர்லாந்து, தென்கொரிய அணிகள் பங்கேற்ற மூன்றாவது லீக் போட்டி நேற்று



முன்தினம் ஹனோவரில் நடந்தது. முதல் இரண்டு லீக் போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி ஒரு சமநிலையையும்பதிவு செய்திருந்தன. முதல் சுற்றில் முன்னிலை பெற இரு அணிகளும் களத்தில் இறங்கின.

எப்படியாவது வெற்றிபெற வேண்டும் என இரு அணிகளும் கடுமையாகப் போராடின. சுவிற்சர்லாந்துக்கு முதல் பாதியில் கிடைத்தது எளிமையான வாய்பபு.

ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில்



கிடைத்த பிறி-கிக் வாய்ப்பை சுவிஸ் வீரர் ஹகன் யாகின் அடித்தார். அதை தனது தலையால் முட்டி ஆட்டத்தின் முதல் கோலை அடித்தார் பிலிப் சென்டரோஸ். தலையால் முட்டும் போது பலத்த காயமடைந்த பிலி[...] இரத்தம் சொட்ட சொட்ட மகிழ்ச்சி[...] கொண்டாடினார்.

ஆட்டத்தின் 40ஆவது நிமிடத்தில் ந[...]சத்திர வீரர் ஹகன் யாகின் அடித்த ம[...]றொரு உதை கோல் லைனுக்கு வெளியே[...] சென்று ஏமாற்றம் அளித்தது. முதல் பா[...]யில் கோல் அடிக்க தென்கொரியாவுக்[...] பெரும்பாலும் வாய்ப்புகள் அமையவில்லை[...]

முதல் பாதியில் முன்னிலை பெற்[...] சுவிற்சர்லாந்துக்கு ஆட்டத்தின் 77ஆவ[...] நிமி டத்தில் வெற்றி உறுதியானது. சே[...]யர் மார்கைராஸ் கொடுத்த பாசை சர்[...]சைக்குரிய முறையில் கோல் அடித்[...] அசத்தினார் அலெக்சாண்டர் பிரய். கோ[...] அடிக்க முயன்ற தென்கொரியாவின் மு[...]



ற்சியை சுவிற்சர்லாந்து வீரர்கள் பலமுறை முறியடித்தனர்.

இறுதியில் சுவிற்சர்லாந்து 2-0 என்[...] கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் குழு 'ஜி' பிரிவில் 7 புள்ளிகளு[...]டன் முதல் இடத்தை பெற்று இரண்டா[...] சுற்றுக்குள் நுழைந்தது சுவிற்சர்லாந்[...] மூன்று லீக் போட்டிகளில் 4 புள்ளிக[...] பெற்ற தென்கொரிய அணி இரண்டாவ[...] சுற்றுக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழ[...]ந்தது.

## ரவுண்ட் அப் '16' சுற்று

### இலங்கை நேரப்படி இன்றைய போட்டிகள்


| அணிகள் | இடம் | நேரம் |
| --- | --- | --- |
| இங்கிலாந்து - ஈகுவடோர் | ஸ்டட்கார்ட் | 8.30 (இரவு) |
| போர்த்துக்கல் - நெதர்லாந்து | நூரம்பர்க் | 12.30 (நள்ளிரவு) |

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை

முருக-தனுஷ்கோடி

07



*"தனுஷ்கோடி! இந்தா கொடி; நட பின்னால்..."*

ஜதீந்திரநாத் தாஸின் தியாகம் இளைஞர் காமராஜை உந்தித் தள்ளியது. நாட்டிற்குக் காந்திஜி காலத்திலேயே சுதந்திரம் கொடுத்துவிட்டால் நல்லது என்று அப்போது காமராஜ் எண்ணினார்.

### நண்பரின் திருமணம்

1930இல் காமராஜின் நெருங்கிய நண்பர் கே.எஸ்.முத்துச்சாமி தன்னுடைய மாமனாரின் வேண்டு கோட்படி கயத்தாறு போயிருந்தார். அவரது மாமனாரின் சொந்த ஊர் அதுவே. கயத்தாறு போன இடத்தில் தடுக்கமுடியாத நிலை ஒன்று முத்துசாமிக்கு ஏற்பட்டது. மாமன் மகளை அவருக்குத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் விவரத்தை நண்பர் காமராஜுக்கு முத்துசாமி எழுதியிருந்தார்.

முத்துசாமியின் கடிதத்தைப் படித்தார் தலைவர். நண்பரின் திருமணத்திற்குக் கண்டிப்பாய்ப் போகவேண்டும் என்று விரும்பினார். என்னை அழைத்து முத்துசாமி எழுதிய கடிதத்தை என்னிடம் தந்தார். கடிதத்தை படித்து முடித்து விட்டுக் காமராஜை நான் பார்த்தேன். 'நான் கயத்தாறு போகிறேன்; முத்துசாமியின் கலியாணத்திற்கு நீயும் என்னுடன் வா' என்று காமராஜ் எனக்குக் கட்டளையிட்டார்.

காமராஜுடன் நானும் புறப்பட்டேன். வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் தலைவருக்கு வேறு ஒரு மரியாதையும் உண்டு. தலைவர் எங்கு போனாலும் ஒரு பொலிஸ்காரர் நிழல்போல அவர் பின்னால் போய்க் கொண்டே இருப்பார்.

தலைவரும் நானும் கயத்தாறு போகும்போது அந்தப் பொலிஸ் நிழலும் எங்களோடு வந்தது. ஆக நாங்கள் மூவரும் கயத்தாறு போய்ச்சேர்ந்தோம். எளிய முறையில் முத்துசாமியின் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அடுத்தநாள் நானும் தலைவரும் விருது நகர் திரும்பிவிட்டோம்.

இரண்டு நாள் கழித்து முத்துசாமி , தம் மனைவியுடன் விருது நகர் வந்துவிட்டார்.

காந்திஜி அப்போது உப்புச் சத்தியாக்கிரகத்தைத் துவக்கினார். தண்டி யாத்திரை வடக்கேயும் – வேதாரண்ய யாத்திரை தெற்கேயும் ஆரம்பமாகியது. வடக்கே காந்திஜி தலைமை வகித்தார்; தெற்கே ராஜாஜி தலைமை வகித்தார். உப்புச் சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து உலகம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டது. பாரத நாடே திரண்டது. லட்சோப லட்சமாய் மக்கள் கூடினார்கள். 'உப்பு வரியை ஒழியுங்கள்' என்று அரசாங்கத்துக்குக் குரல் கொடுத்தனர். எங்கும் அடக்குமுறை தாண்டவமாடியது. பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போட்டுத் தலைவர்களைக், கைது செய்து சிறையில் வைத்தார்கள். காந்திஜியின் சக்தி உலகெங்கும் பரவியது. தடியடி தாண்டவமாடியது. ஆங்கிலேய சர்க்காரின் வெறிச் செயல்களை , மேனாடுகள் கேட்டு மனம் கொதித்தன. பிரிட்டனில் , சர்க்காரின் போக்கை வெள்ளையர்களே வெறுத்துக் கண்டித்தார்கள்.

### முதல் சிறை வாசம்

உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தலைவரும் குதித்தார். பொலிஸார் அவரைக் கைது செய்தனர். காந்திஜி ஆரம்பித்த உப்புச் சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டு உப்புக் காய்ச்சியதற்காக காமராஜுக்கு இரண்டு ஆண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தலைவரோடு புது மாப்பிள்ளையான முத்துசாமியும் கைது செய்யப்பட்டார். முத்துசாமிக்குத் திருமணம் நடந்து ஒருவாரத்தில் , தலைவரும் அவரும் சிறைப் பறவை ஆனார்கள். தலைவர் காமராஜ் தண்டிக்கப்பட்டுச் சிறை சென்றது இதுவே முதல் தடவை.

அலிபுரம் சிறையில் காமராஜரை வைத்தார்கள். தன் மகன் திருமணம் செய்து ஏழு நாட்களில் சிறைசெல்ல நேரிட்டதைக் கண்டு முத்துசாமியின் தாயார் அழுது புலம்பினார். நானும் என் நண்பர்களும் எவ்வளவோ ஆறுதல் கூறியும் முத்துசாமியின் தாயார் வருத்தத்தைக் குறைக்க முடியவில்லை.

தலைவர் வீட்டில் தன் பேரன் சிறை சென்றதிலிருந்து பாட்டி பார்வதியம்மாள் உடல் நிலை சரியில்லை. பாட்டியின் வெளி நடமாட்டம் குறைந்தது. படுத்த படுக்கையானார். விருதுநகர் காங்கிரஸ் தொண்டர்கள் காமராஜின் விடுதலை நாளை ஏக்கத்துடன் எதிர்பார்த்தார்கள். நானும் நாட்டாண்மை துரைசாமி நாடாரும் அலிபுரம் சென்றோம். பாட்டியின் உடல் நிலையைத் தலைவருக்குத் தெரிவித்தோம். பரோலில் வந்து போகும்படி கூறினோம். பரோலில் வரத் தலைவர் மறுத்து விட்டார். 1931 இல் காந்தி – இர்வின் உடன்படிக்கை ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையின் படி காமராஜ் விடு தலை செய்யப்பட்டார்.

### காளியம்மன் கோவில் பீடத்தில்...!

பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துச் சிறைசென்ற தேசபக்தர்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். முன்னின்று வேலை செய்து சிறை சென்றவர்கள் பின்னால் இருந்து இயக்கத்தை வலுவடையச் செய்து சிறை சென்றவர்கள் எனப் பிரிக்கலாம். காமராஜ் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர். ஆனால் போராட்டம் என்றவுடன் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் காமராஜை முதல் அறிக்கை வந்ததுமே கைது செய்துவிடும் . இப்படியே எல்லாப் போராட்டத்திலும் காமராஜ் முதலிலேயே கைது செய்யப்பட்டார்.

விடுதலை அடைந்து காமராஜ் விருதுநகர் திரும்பினார் ரெயில் நிலையத்தில் தலைவரை வரவேற்க மக்கள் வெள்ளம்போல் திரண்டு வந்திருந்தனர். காமராஜைக் கண்டதும் 'காந்திக்கு ஜே; காமராஜுக்கு' ஜே என்ற கோஷம் வானைப் பிளந்தது. ரெயில் நில்யத்துக்கும் தலைவர் வீட்டுக்கும் ஒரு மைல் தூரம் இருக்கும் பெரிய கடைவீதி வழியாகத் தலைவரை ஊர்வலமாக அழைத்துச் சென்றோம் ஊர்வலம் தலைவர் வீட்டை அடைந்தது.

அதுவரை விருதுநகர் கண்டிராத ஊர்வலம் அதுவேயாகும். பக்கத்துக் கிராமத்து மக்களும் வந்து உள்ளூர் மக்களோடு வரவேற்பு ஊர்வலத்தில் கலந்துகொண்டதால் விருதுநகரே குலுங்கியது.

வீட்டுக்கு வந்ததும் தலைவரிடம் நான் சென்றேன் அருகில் உள்ள காளியம்மன் பீடத்தில் ஏறி இரண்டு வார்த்தைகள் பேசம்படி காமராஜிடம் நான் வேண்டிக்கொண்டேன் அவரும் பேசினார்.

உங்கள் அபிமான நண்பனான எனக்கும் மகத்தான வரவேற்புக் கொடுத்தீர்கள் உங்கள் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி நீங்கள் அனைவரும் எனக்காக ஒன்றும் செய்யவேண்டும் அதாவது கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும் நீங்கள் கொடுத்த இந்த மகத்தான வரவேற்பினால் எனக்குத் தலைக் கணம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று நீங்கள் அனைவரும் கடவுளைப் பிராத் திக்க வேண்டுகிறேன்' என்று அப்போது பேசினார் காமராஜ். தலைவரின் ரத்னச் சுருக்கமான பேச்சு அவரின் முதல் மேடைப் பேச்சை, என் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தியது. (தொடரும்)

## புதிய கட்டடத் திறப்பு விழா

(காரைநகர்)

காரைநகர் வைத்தியசாலையில் புதிய கட்டத்தொகுதி நாளை திங்கட்கிழமை காலை 11.30மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

காரைநகர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபைத் தலைவர் ஜெ.தில்லையம்பலவாணனின் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் பிரதம விருந்தினராகவும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ. கேதீஸ்வரன் காரைநகர் உதவி அரச அதிபர் ரி.ஜெயசீலன் , காரைநகர் பிரதேச சபைச் செய லாளர் இரா. யோகநாதன், வைத்திய காலநிதிந.ஜெயக் குமார், மாகாண சுகாதார சேவைகள் நிர்வாக உத்தியோகத்தர் எஸ் சிவலிங்கம், வைத்திய கலாநிதி தா. சிவபாதம், சுகாதார சேவைகள் மேல் திக பிரதிப்பணிப்பளர் த. தனரஞ்சனராஜன் ஆகியோர் சிறப்பு விருத்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

புதிதாக திறக்கப்படும் இக்கட்டடத் தொகுதியில் சுவீஸ் ,காரை அபிவிருத்திச் சபையின் நிதி உதவியில் கட்டப்பட்ட மெடிக்கல் கிளினிக் அறை, வைத்திய அதிகாரி தங்கும் அறை, ஈ.சி.ஜி. அறை, என்பன அமைக்கப்பட்டுள்ளன. காரை நகரைச் சேர்ந்த திருமதி ச்ண்முகம் மனோன் மனி ஞாபகார்த்த நிதி உதவிப் பரிசோதனைக் கூட அறை அமைக்கப்படவுள்ளது. சுமார் இருபத்தைந்து இலட்சம் ரூபா செலவில் இக் கட்டத்தொகுதி அமைக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடமும் லண்டன்–காரை அபிவிருத்திச் சபையின் நிதியுதவியுடனும், அமரர் இராசநாயகம் ஞாபகார்த்த நிதியுதவியுடனும் அமைக்கப்பட்ட நோயாளர் விடுதி திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (க–246)

## பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் பதவியேற்பும்

(தனங்கிளப்பு)

சாவகச்சேரியில் உள்ள லயன்ஸ் கழகத்தின் 27ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் பதவி ஏற்பு நிகழ்வும் எதிர்வரும் ஜுலை முதலாம் திகதி கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்நிகழ்வு கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் .

இந்த நிகழ்வுக்கு சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத் துணை ஆளுநர்லயன் ஆர் . இராகவன் முதன்மை விருந்தினராக் கலந்து கொள்வார்.

கழகத்தின் புதிய தலைவராக லயன் வ.சிறிபிரகாஸமும் செயலாளராக லயன் எஸ்.நரேனும் பொருளாராக ஸ்ரீ சுடரோனும் பதவி யேற்கவுள்ளனர். (க–37)

## வருடாந்த மஹோற்சவம்

இருபாலை கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மாஹோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி இரதேற்சவமும்10ஆம் திகதி தீர்த் தோற்சவமும் நடைபெறவுள்ளது.

அத்துடன் மாஹோற்சவக் காலத்தில் ஸ்ரீமுத்துமாரி கல்யாண மண்படத்தில் மகேஸ்வர பூஜையும் இடம்பெறவுள்ளது. (த–136)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

காரைநகர் பிரதேச செயலக பிரிவு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை 10 மணிக்கு நடைபெற வுள்ளது. காரைநகர் உதவி அரச அதிபர் ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற அத்தியாவசிய சேவைகளின் முன்னேற்றம் குறித்து ஆராயப்படவுள்ளதுடன் விவசாயம், மீன்பிடி போன்றவற்றின் அபிவிருத்தி தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

ஆதலால் அனைத்து திணைக்கள பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு காரைநகர் உதவி அரச அதிபர் ரி.ஜெயசீலன் கேட்டுள்ளார். (க–246)

## வருடாந்த மகோற்சவம்

வரலாற்றுப் பெருமைமிக்க வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை துவஜஹரோகணத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

ஜுலை மாதம் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைரவர் பொங்கலுடன் முடிவடையும் இம் மகோற்சவிழாவில் ஜுலை மாதம் 1ஆம் திகதி சனிக்கிழமைபி.ப 3மணிக்குத்தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமைநண்பகல் 12மணிக்குத்தீர்த் தோற்சவமும் நடைபெறும். (து)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் இயங்கி வந்த வலி கிழக்கு பிரதேசசபைதலைமை அலுவலகம் கடந்த 14ஆம் திகதி முதல் புத்தூருக்குமாற்றப்பட்டுள்ளது.

குறித்த அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள விரும்புவோர் செயலாளர் வலி கிழக்கு பிரதேச சபை பருத்தித்துறை வீதி புத்தூர் என்ற முகவரி ஊடாக தொடர்பு கொள் ளலாம். (க)

அன்பு வாசகர்களே!

நயினாதீவு நாகபூசணி அம்பாளின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வலம்புரியில் இம்முறையும் "நயினை நாகபூசணி அம்மன் பாமாலை" வெளிவரும். நயினை அம்மனைத் துதி செய்யும் உங்கள் பாமாலைகளை 8 வரிகளுக்கு உட்பட்டதாக எழுதி

நயினை நாகபூசணி அம்மன் பாமாலை
வலம்புரி
இல.03 இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# நிலச்சரிவில் சிக்கியோரை மீட்க கடலிலும் தேடும்பணி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போனவர்களை கடலிலும் தேடும் பணி நடந்து வருகிறது.

இந்தோனேசியாவின் சுலவேசி மாகாணத்தில் இந்த வாரதொடக்கத்தில் இரண்டு நாட்கள் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இதனால் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

இதைத்தொடர்ந்து நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் பல குடியிருப்புகள் மண்ணுக்குள் புதைந்தன. நிலச்சரிவு மற்றும் வெள்ளத்திற்கு 215 பேர் பலியாகியுள்ளனர். பலரைக் காண வில்லை இந்தோனேசிய பொலிஸார் செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் இணைந்து மீட்புப்பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

எங்கு பார்த்தாலும் நிலச்சரிவினால் ஏற்பட்ட மணல் குவியல்கள் மணல் குவியல்களுக்கு இடையில் சிக்கி அழுகிய நிலையில் பிணங்கள் என மாகாணமே மயானமாய் காட்சியளிக்கின்றது.

மீட்புப்பணியில் உச்சக்கட்டமாய் மீட்புக் குழுவினர் கடலுக்குள் தேடுதல் வேட்டையை தொடங்கி உள்ளனர். இது குறித்து செஞ்சிலவைச் சங்க மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில் வெள்ளப்பெருக்கில் சிக்கிய சிலர்கள் கடலுக்குள் அடித்து வரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கடலிலும் தேடுதல் வேட்டையை ஆரம்பித்து இருக்கிறோம்.

வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச் சரிவுக்கு 215 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 300 பேரை காணவில்லை பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணவு பற்றாக்குறை ஏதும் இல்லை மலை பிரதேசமாக இருப்பதால் உணவை விநியோகிப்பதில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியில் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது என்றார்.

இதற்கிடையே சுமத்ரா தீவுப் பகுதியில் கடலில் பயணம் செய்தவர்களில் 39 பேரைக் காணவில்லை என இந்தோனேசியா கடற்படை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கடற்படை லெப்டினனட் கேணல் ஜகாசந்தோசோ கூறுகையில் சுமத்ரா தீவில் இருந்து நியாஸ் தீவுக்கு மக்களை ஏற்றிக்கொண்டு வழக்கமாக செல்லும் படகு மோசமான வானிலை காரணமாக சில தினங்களுக்கு முன் கடலில் மூழ்கியது.

இதில் 94 பேர் உயிருடன் மீட்கப் பட்டுள்ளனர் இன்னும் 39 பேரின் நிலை என்ன ஆனது எனத் தெரியவில்லை என்றார். (தி)



பசுபிக் பெருங்கடலில் உள்ள குவாம் தீவில் வேலியண்ட் ஷீல்ட் 06 என்ற பெயரில் அமெரிக்கா நடத்திய மிகப்பெரிய இராணுவ ஒத்திகையின் போது ஒரு விமானத்தில் இருந்து இன்னொரு விமானத்திற்கு எரிபொருள் நிரப்பப்பட்டது.

# உண்ணாவிரதத்தைக் கைவிட்டார் சதாம்

(பக்தாதி)

தனது வக்கீல் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து சிறையில் உண்ணா விரதம் இருந்தஈராக் முன்னாள் அதிபர்சதாம் உசேன் கடந்த வியாழக்கிழமை இரவு உணவை சாப்பிட்டு உண்ணா விரதத்தை கைவிட்டார்.

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் அமெரிக்க படைகளால் கைது செய்யப்பட்டு தற்போது சிறைவாசம் அனுபவித்து வருகிறார். இவரது ஆட்சிக்காலத்தில் துஜெயில் பகுதியில் 148 ஷியா பிரிவு முஸ்லிம்கள் சித்திரவதைக்கு பின்பு படுகொலை செய்யப்பட்டனர். இது தொடர்பாக பக்தாத் சிறப்பு கோர்ட்டில் சதாம் மீதான வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

கலீல் அல்துலாய்மி தலைமையிலான வக்கீல் குழு சதாம் சார்பில் ஆஜராகி வாதாடி வருகிறது. இந்த வழக்கில் சதாமுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என அரசு தரப்பு வக்கீல் வாதம் செய்துள்ளார்.

இந்நிலையில் சதாமுக்கு ஆதரவாக வாதாடும் வக்கீல் குழுவில் உள்ள சீனியர் வக் கீல் வாதம் செய்துள்ளார். இந்நிலையில் சதாமுக்கு ஆதரவாக வாதாடும் வக்கீல் குழு வில் உள்சீனியர் வக்கீல் கமீஸ் அல் ஒபாய்டியை எப்பவரை கடந்த புதன்கிழமை மர்மகும்பல் ஒன்று கடத்திச் சென்று சுட்டுக்கொன்றது. இவ ரின் உடல் பக்தாத் வீதியில் கண்டெடுக்கப் பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சதாம் உசேன் வியாழக்கிழமை மதிய உணவு சாப்பிட மறுத்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார் இது குறித்து அமெரிக்க இராணுவ செய்தித் தொடர்பாளர் கூறுகையில் சதாம் உண்ணா விரதத்தை கைவிட்டுள்ளார்.

சதாமுடன் உண்ணாவிரதமிருந்த அவரின் ஆதரவாளர்கள் 55 பேரும் உண்ணா விரதத்தை கைவிட்டனர் என்றார். வக்கீல் கமீஸ் அல் ஒபாய்டியின் படுகொலையைச் சேர்த்து இதுவரை சதாம் ஆதரவு வக்கீல்கள் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

# ஏவுகணையைக் கண்காணித்து அழிக்கும் அமெரிக்காவின் சோதனை வெற்றி

(வாஷிங்டன்)

எதிரியின் ஏவுகணையை அது வரும் திசையை கண்காணித்து வழிமறித்துத் தாக்கி அழிக்கும் அமெரிக்காவின் சோதனை வெற்றி பெற்றுள்ளது.

ஹவாய்தீவில் பசுபிக் பெருங்கடலுக்கு மேல் இச்சோதனை நடத்தப்பட்டது. எதிரியின் ஏவுகணையைக் கண்காணித்து அழிக்கும் இந்த ஏவுகணை போர்க்கப்பலில் இருந்து செலுத்தப்பட்டது.

எதிரியின் ஏவுகணை வரும் திசையைக் கண்காணித்து அதைக் குறி தவறாமல் தாக்கி அழிக்கும் இச்சோதனையில் ஜப்பானின் ஏவுகணை பயன்படுத்தப்பட்டது.

நீண்டதூர ஏவுகணைச் சோதனையை நடத்த வட கொரிய திட்டமிட்டுள்ளது தொடர்பாக சர்ச்சை எழுந்துள்ளநிலையில் இச்சோதனையை அமெரிக்கா நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறைந்த மற்றும் மத்திய தொலைவு ஏவுகணைகளைக் கண்காணித்து அவற்றைத் தாக்கி அழிக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டது. எனினும் நீண்டதூர ஏவுகணைகளையும் தாக்கி அழிக்கும் வல்லமை படைத்தது.

அமெரிக்கக் கடற்படைக் கப்பலில் இருந்து இந்த அதி நவீன எஸ்எம்-3 ஏவுகணை விண்ணில் செலுத்தப்பட்ட 6 நிமிடத்தில் எதிரியின் ஏவுகணையைக் கண்காணித்து விண்ணிலேயே தாக்கி அழித்தது. பசுபிக் கடல் மட்டத்துக்கு மேல் 100 மைலுக்கும் உயரத்திலும் கௌவாய் என்ற இடத்திலிருந்து 250 மைல் தொலைவில் பூமியின் வளிமண்டலத்துக்கு மேல் இச்சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. (தி)

WORLD NEWS உலக தரிசனம்

# அமெரிக்க இராணுவத்திற்கு தகவல் கொடுத்த நால்வரின் தலை தீவிரவாதிகளால் துண்டிப்பு

(கந்தகார்)

அமெரிக்கா இராணுவத்திற்கு உளவு கூறியதாகக் குற்றம் சாட்டி ஆப்கனை சேர்ந்த நான்கு பேரை தலையை துண்டித்து தலிபான் தீவிரவாதிகள் படுகொலை செய்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி அகற்றப்பட்டபின் அங்கு ஹமீத் கர்சாய் தலைமையிலான ஆட்சி நடந்து வருகிறது. அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப்படையினர் அங்கு பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்க படையினர் வெளிநாட்டவர் மற்றும் ஆப்கனை சேர்ந்தவர்கள் மீது தலிபான் தீவிரவாதிகள் அவ்வப்போது கொடூர தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் ஆப்கனின் தெற்குப்பகுதியைச் சேர்ந்த நான்கு பேரை தலிபான் தீவிரவாதிகள் கடத்திச்சென்றனர்.

அமெரிக்காஇராணுவத்தினருக்கு துப்பு கொடுத்ததாக குற்றம் சாட்டி நான்கு பேரின் தலையையும் வெட்டி கொலை செய்தனர். தலை துண்டிக்கப்பட்ட இருவரின் உடல்கள் சஜோப் மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டன. மற்ற இருவரின் உடல்கள் வேறு ஒரு இடத்தில் கிடந்தன.

இதேபோல் ஹெல்மண்ட் மாகாணத்தில் மோட்டார்சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொலிஸ்காரர் ஒருவர் சாலையோரத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டில் சிக்கி பலியானார். (தி)


# ஈராக்கில் குண்டு வெடிப்பு

(பக்தாதி)

ஈராக்கில் சாலையோரத்தில் குண்டு வெடித்ததில் அமெரிக்கா கடற்படையினர் மூன்று பேர் பலியாயினர்.

ஈராக்கின் மேற்கு பகுதியில் உள்ளது அன்பாமாகாணம் இந்த மாகாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் சென்ற வாகனம் சாலையோரம் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி குண்டில் சிக்கி பலத்த சத்தத்துடன் வெடித்து சிதறியது.

இந்த சம்பவத்தில் வாகனத்தில் இருந்த மூன்று வீரர்கள் கொல்லப்பட்டனர் மற்றொரு தாக்குதல்சம்பவத்தில் மேலும் ஒரு கடற்படை வீரர் பலியானார். (தி)



ஹங்கேரி சென்றிருக்கும் ஜோர்ஜ்புஷ் புடாபெஸ்ட் நகரில் டான்யூப் நதி அருகே ஜெல்லர்ட் ஹில் என்ற பகுதியில் இருந்து உரை நிகழ்த்தினார்.

# பக்தாத்தில் ஊரடங்கு

(பக்தாதி)

ஈராக்கில் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்கா கூட்டு படையினரையும், ஈராக் பொலிஸாரையும் சதாம் உசேன் ஆதரவு தீவிரவாதிகள் கார் குண்டு தாக்குதல் நடத்தி படுகொலை செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில் அங்கு ஷியாமுஸ்லிம்களுக்கும், சன்னி பிரிவினருக்கும் இடையே மோதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஷியா பிரிவினரின் மசூதிகளை சன்னி பிரிவினர் குண்டு வீசி தகர்த்து வருகிறார்கள்.

நீண்ட நாட்களாக நடந்து வரும் இந்த மோதல்களில் இது வரை ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகி விட்டானர். இப்போது இந்த இனக்கலவரம் உள்நாட்டுப் போர் நடப்பது போல உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

சன்னி தீவிரவாதிகள் ஹைபா பகுதியில் துப்பாக்கிகளுடன் வீதி வீதியாக சென்று ஷியா முஸ்லிம்களை சரமாரியாக சுட்டனர். ஷியா பிரிவினரும் எதிர்தாக்குதல் நடத்தினார்கள் ரொக் கெட்டுக்களும் வீசப்பட்டன. சரமாரியாக வெடிகுண்டுகள் வீசப்பட்டன.

இதைத்தொடர்ந்து அமெரிக்க படையினரும் ஈராக் பொலிஸாரும் அங்கு விரைந்தனர் இதை தொடர்ந்து அந்த பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது வேறு சில பகுதிகளுக்கு ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. (தி)

பிறர் மனம் வருந்தச் செயல் புரியாதீர்கள். உங்கள் உரிமையை விட்டு விடாதீர்கள். பிறர் உரிமையில் தலையிடாதீர்கள்.

-சுவாமி இராமதாசர்.

வலம்புரி

# நயினாதீவு செல்லும் பக்தர்களுக்கு கெடுபிடியற்ற பயண வசதி தேவை

வரலாற்றில் சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இக் காலத்தில் பல பாகங்களிலிருந்தும் ஆலய தரிசனத்திற்காக இலட்சக்கணக்கான அடியார்கள் நயினாதீவுக்குச் செல்வது வழக்கம்.

கடல் கடந்து செல்லும் பயணத்தால் அவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவது மிகவும் அவசியமானதாகும்.

அதேநேரம் நயினாதீவுக்குச் செல்லும் பக்தர்கள் சிரமமின்றி ஆலயத்திற்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை அரச நிர்வாகமும் பாதுகாப்புப் படையினரும் செய்தாக வேண்டும்.

சோதனை நடவடிக்கைகள் தேவையாயின் அதற்கேற்ற ஓர் நடைமுறையை கடைப்பிடிக்கலாம். மாறாக படையினரின் சோதனைச் சாவடிகள் தோறும் பக்தர்களை இறக்கி ஏற்றுவது அவர்களுக்கு தாளாத சிரமத்தைக் கொடுப்பதுடன் நேர விரயத்தையும் ஏற்படுத்தும்.

அதேநேரம் ஈழத்துச் சைவத் தமிழர்களின் வரலாற்றுப் பெருமை பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு சென்று வழிபடுவதற்குக் கூட இத்தனை சோதனை நடவடிக்கையா? என்ற கேள்வியும் மக்களிடையே ஏற்படும்.

இத்தகைய உணர்வு நாட்டின் சமாதானத்திற்கும் மத ஒற்றுமைக்கும் ஆரோக்கியமானதல்ல. பௌத்தர்கள் தமது வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்றால் இப்படியெல்லாம் படையினர் சோதனை நடாத்துவார்களா? அதற்கு அரசு இடம்கொடுக்குமா? என்ற கேள்வி சைவ மக்களிடையே ஏற்படவே செய்யும்.

அதேவேளை பக்தர்கள் வழிபாடு நடத்தவும் அவர்கள் நேர்த்திக் கடன்களைத் தீர்பதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதும் அரசினது கடமை என்பது இங்கு சுட்டிக்காட்டுவதற்குரியது.

நாளை முதல் பதினாறு தினங்கள் இடம்பெறும் மஹோற்சவத்தில் கலந்து கொள்ளச் செல்லும் பக்தர்களுக்கு தொந்தரவு ஏற்படாதவகையில் அவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளை வழங்க வட பிராந்திய போக்குவரத்துச் சபையும் தனியார் வாகன உரிமையாளர்களும் திட்டமிட்டவாறான ஒழுங்கு முறைகளைச் செய்வது தேவையானதாகும்.

அத்துடன் குறிகட்டுவான், நயினாதீவு படகுச் சேவையில் ஈடுபடுபவர்களும் கடந்த காலங்களைப் போன்று தமது நேர்த்தியான சேவையை வழங்குவார்கள் என்று நம்பலாம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருத்தலும் யுத்த சூழ்நிலை தென்படுவதும் ஆங்காங்கே சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதும் நடைமுறையில் இருப்பதால் நயினாதீவுக்குச் செல்லும் பக்தர்களின் பாதுகாப்பு - அவர்களின் போக்குவரத்து ஏற்பாடுகள் போன்ற விடயங்களில் உரிய தரப்புக்கள் உரிய ஒழுங்குகளை செய்வது கட்டாயமானதா கும்.

# தலைவிதியை பற்றி சிந்திக்கும் நிலை தமிழ் மக்களுக்கு உருவாகியுள்ளதாம்

## கா.வே.பாலகுமாரன் சுட்டிக்காட்டு



(கிளிநொச்சி)

தமது தலைவிதியைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய நிலையில் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி திருமுறிகண்டிக் கிராமத்தின் மக்கள் கட்டு மாணப் பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாங்கள் முன்பு எப்படி வாழ்ந்தோம். இப்போது எப்படி வாழ்கிறோம் என்று சர்வதேசத்திற்கு தெளிவாகச் சொல்ல ஒன்று சேர்ந்திருக்கின்றோம்.

இன்று எமது இனத்தின் மீது பெரும் அநியாயங்களைச் சிங்கள தேசம் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது மரணம் அனைவரின் வீட்டுக்கதவுகளையும் தட்டுகின்றது.

இந்நிலையில் எமது விடுதலைப்போராட்டத்தின் நியாயப்பாடுகளை சர்வதேசத்தின் கண்முன்னால் கொண்டு வர வேண்டும் எம்மீது சிங்கள தேசம் இழைக்கின்ற கொடுமைகள் படுகொலைகள் என்பவற்றைச் சர்வதேசத்தின் கண்முன்னால் கொண்டுவரவேண்டும்.

தமிழீழ தேசத்தின் விடுதலைக்காகவும் மக்களின் விடுதலைக்காகவும் நடத்தப்படுகின்ற தமிழீழ விடு[illegible]லைப்போர் சிறு குழுவாலோ அல்லது ஒரு சில போராளிகளினாலோ நடத்தப்படுவதல்ல ஒட்டுமொத்தச் தமிழ்ச்சமூகமே இன்று அணிதிரண்டு நடத்துகின்றது.

1960 ஆம் ஆண்டில் நாம் அமைதி வழியில் போராடிய போது சிங்கள பேரினவாதிகள் இராணுவ ரீதியாக அடக்க முயன்றார்கள் தமிழர்களை படுகொலை செய்தார்கள் அதற்கான பதிலடிகளை தலைவர் கொடுத்தார். பெருவெற்றிகளையும் நாங்கள் பெற்றோம். வெற்றிகளைப் பார்த்து உலகம் திகைத்துப்போயிருந்தது.

பின்னர் உலகம் எம்மிடம் வந்து அமைதியான அணுகுமுறைகளை மேற்கொள்வோம் என்று விடுத்த கோரிக்கையை ஏற்று நான்கு வருடமாக அமைதி வழியில் மிகச் சமாந்தரமாகப் பயணித்து மக்களின் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தினோம் . அத்துடன் அவர்களுக்கு ஒரு புதிய விடயத்தை தெளிவுபடுத்தினோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ்மக்களும் எமது இலட்சியத்தை இலக்கை உயரிய போராட்டத்தின் தன்மையை இழக்கமாட்டோம் அதன்படியே சர்வதேசத்துடன் பேசினோம் பேசும் போது எமது கொள்கையை கோட்பாட்டை நழுவச் செய்த போது உறுதியாக நின்றோம் இது தனியே புலிகளின் பிரச்சினையல்ல ஒரு இனத்தின் பிரச்சினை தமிழ் ஒட்டுமொத்த சமூகம் என்பதை அனைவரும் விளங்கிக்கொள்ளவேண்டும் என்றார்.

மக்கள் கட்டுமான அடிப்படைப்பயிற்சி நிறைவு நிகழ்வுகள் நேற்று முன்தினம் செல்வபுரம் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 4.00மணிக்கு ஆரம்பாமாகின.

பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் ஆரம்பமாகிய இந் நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியினை அரசியல் துறைப் பொறுப் பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

பொதுச்சுடரினை க.வே.பாலகுமாரன் நீதி நிர்வாகத் துறை பொறுப்பாளர் பரா ஆகியோர் ஏற்றினர்.

தொடர்ந்து மண்டபத்தில் வைக்கப்பட்ட மாவீரர்களின் திருவுருப்படங்களுக்கு திட்டமிடல் செயலக உதவிப்பணியாளர்கள் உள்ளிட்டோர் ஏற்றினார். தொடர்ந்து சிறப்புரையினை ஆற்றினார். இப்பயிற்சி நிறைவில் திருமுறிகண்டி பொன்நகர் செல்வபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு அதிகமான தற்காப்புப்பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர். (கு)

# பருத்தித்துறை-சாவகச்சேரி பஸ்சேவை நேரமாற்றம்

(குனங்கிளப்பு)

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரங்கள் மாற்றப்பட்டதையடுத்து இலங்கை போக்குவரத்துச் சபையும் பஸ் சேவைகளுக்கான நேரத்தில் மாற்றஞ்செய்துள்ளது.

கடந்த 19ஆம் திகதி முதல் பஸ் சேவைகள் அரை மணித்தியாலம் முன் நகர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி சரசாலையூடாக சாவகச்சேரிக்கு செல்லும் பஸ்வண்டிகள் பருத்தித்துறையிலிருந்து காலை 6.20 மணிக்கும் , 9.25 மணிக்கும் நண்பகல் 1.05 மணிக்கும் பி.ப. 4 மணிக்கும் சாவகச்சேரியை நோக்கிப் புறப்படும்.

சாவகச்சேரியிலிருந்து காலை 7.55 மணிக்கும் 10.40 மணிக்கும் பி.ப. 2.35 மணிக்கும் பி.ப.5.40 மணிக்கும் புறப்படும் பஸ்வண்டிகள் சரசாலையூடாக பருத்தித்துறையை சென்றடையும். (கு-37)

# அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று சனிக்கிழமை காலை 9.00மணிக்கு ஆரம் பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து தினமும் பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்வுள்ளதுடன் அடுத்த மாதம் 3ஆம் திகதி 108 சங்கா பிஷேகமும் நடை பெறவுள்ளது. (கு-29)

# வருடாந்த மஹோற்சவம்

(நல்லூர்)

நல்லூர் மூத்த விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் அண்மையில் ஆரம்பமானது.

எதிர்வரும் 30ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் முதலாம் திகதி தேர்த் திருவிழாவும் இரண்டாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (கு-26)

# இலகு தவணை கொடுப்பனவு முறையின் கீழ் ஆசிரியர்களுக்கு கணனி வழங்கநடவடிக்கை

## எடுக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

நாட்டின் கல்வி தேசிய கொள்கைக்கு அமைய நடைமுறைப் படுத்தப்படவேண்டுமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் வெவ்வேறு அரசாங்கங்கள் நாட்டின் கல்விமுறையில் கொண்டுவந்த மாற்றங்கள் காரணமாக மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் என்றும் பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் புத்தகப் படிப்புடன் தமது அறிவை மட்டுப்படுத்திக்கொள்கின்றார்கள் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதனால் அவர்களின் திறமையையும் ஒழுக்காற்றலையும் விருத்தி செய்வதற்கு அடுத்த ஆண்டு தொடக்கம் மாணவர் கடேச் மற்றும் சாரணியம் கட்டாயமாக்கப்படும்.

அத்துடன் 18 ஆயிரம் ஆசிரியர்களுக்கு இலகு தவணை கொடுப்பனவு முறையின் கீழ் கணனிகள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் அடுத்த் ஆண்டிலிருந்து சகல பாடசாலைகளுக்கும் மின்சாரமும் நீரும் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

கல்வித்துறையின் முன்னேற்றம் பற்றி ஆராயும் கூட்டம் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

பயனுள்ள உயர் கல்வியை வழங்குவதற்கு கல்வியமைச்சு 5 ஆண்டு திட்டமொன்றை வகுத்துள்ளது. இதேவேளை க.பொ.த.உயர்தரப்பரீட்சை வினாத்தாள்கள் கொடுக்கப்பட்ட பாடவிதானத்திலிருந்து மாறுபடுவதாக மாணவர்கள் தெரிவித்த முறைப்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை பற்றி கவனம் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நான் உடனடியாக பணிப்புரை விடுத்துள்ளேன்.

இவை தவிர சிங்கள மொழி மூல மாணவர்களுக்கு தமிழ் மொழி கற்பிக்கப்படவேண்டும் தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு சிங்கள மொழி மூலம் கற்பிக்கப்படவேண்டும். இது சமூகங்களிடையேயுள்ள இடைவெளியை குறைத்துக் கொள்வதற்கும் சிறந்த வழியாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (கு-9)

# முதலுதவி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங் கத்தினரால் நேற்று சென் ஜோன்ஸ் கல்லூரியில் நடாத்தப்படவிருந்த முத லுதவி பரீட்சையை தவிர்க முடி யாத காரணங்களினால் எதிர் வரும் புதன்கிழமைக்கு நடத்த சங்கம் தீர் மானித்துள்ளது.

முன்னர் அறிவிக்கப்பட்ட நேர ஒழுங்கிலேயே இப்பரீட்சை சென்ஜோன்ஸ் கல்லூரியில் நடை பெறும். (கு-5)

தினசரி தியானம்

விவேகச் சிந்தனைகள்



'நான' 'எனது' என்பதை விலக்கி விடவேண்டும் என்று அறிந்து கொள்ளும் சாதனுக்குத் துன்பத்துக்கெல்லாம் காரணமாகிய பிறவித்தளை எற்படுத்துவதில்லை.

# க.கா.குழுவினரை மாற்றக் கோருவது

# பேச்சிலிருந்து புலிகள் விலகுவதற்காகவே

## அரச சமாதான செயலகப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(சென்னை)

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கண்காணிப்பாளர்களை விடுதலைப்புலிகள் நிராகரித்தமையானது ஒஸ்லோப் பேச்சுக்களில் பங்குபற்றாமல் விடுவதற்கான ஒரு கண் துடைப்பு என இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பாலித ஹோகன்ன சென்னையில் இருந்து வெளிவரும் ஹிந்துப் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளை அமெரிக்கா தடை செய்துள்ளது என்பதால் இலங்கையிலுள்ள யுனிசெவ் நிறுவனத்தின் தலைவராகவுள்ள அமெரிக்கர் விடுதலைப்புலிகளால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவர் என்று அர்த்தம் கொள்ளலாமா? என அவர் கேள்வியெழுப்பினார்.

மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுமா? என்று கேட்டபோது மனித உரிமைகள், மனித உரிமை மேம்பாட்டு விவகாரங்கள் என்பவற்றிலிருந்து பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டியிருக்கும்.

விடுதலைப்புலிகள் வெளிப்படை விவகாரங்களை பேச மறுத்து வருவதால் கண்காணிப்புக்குழுவினரின் பணிகள் போன்றவற்றை பற்றி பேச வேண்டியிருக்கும். இவ்வாறு பாலித ஹோகன்ன தெரிவித்தார். (ச–5,6)

# விடுதலைப்புலிகளின் நிபந்தனை யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல்

## அரசாங்கம் குற்றஞ்சாட்டு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த கண்காணிப்புகுழு உறுப்பினர்கள் வெளியேற வேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் நிபந்தனை விதித்திருப்பது யுத்த நிறுத்த ஒப்பந்த மீறலாகும் என்று அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் பேசிய அரசாங்கத்தின் பாதுகாப்புப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல, விடுதலைப்புலிகளின் நிபந்தனை சரியானதல்ல. இரு தரப்பும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள நிலையில் ஒரு தரப்புக்காக மட்டும் அதை மாற்றிக் கொண்டு இருக்க முடியாது என்றார்.

இதேவேளை தமிழீழ விடுதலை புலிகளின் இந்த நிலைப்பாட்டை விமர்சனம் செய்து அரச சமாதான செயலகமும் கண்டன அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.(க–9)

# தமிழர்கள் சுய மரியாதையுடன் வாழும் சூழ்நிலை இலங்கையில் உருவாக வேண்டும்

## இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவிப்பு

(பெங்களூர்)

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஆயுத வழி மூலம் தீர்வு காண முடியாது என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

கர்நாடகப் பிரதேசத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற் கொண்டு திரும்பும் வழியில் பெங்களூர் விமான நிலையத்தில் வைத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இறைமையை பாதிக்காத வகையில் இந்திய மத்திய அரசு உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் தமிழ் மக்கள் சுய மரியாதையுடன் வாழக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார். (ச–5)



தென்னாபிரிக்க தமிழர் ஒருங்கிணைப்புக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் மனித உரிமை ஆதரவு அமைப்புக்களின் உறுப்பினர்களும் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களைக்கண்டித்து அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்ட காட்சியைப் படத்தில் காணலாம்.

# மானிப்பாயில் ஆயுதம் மீட்பு

மானிப்பாயில் சிவிலியன் ஒருவரிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் நேற்று முன்தினம் மாலை நடத்தப்பட்ட தேடுதலின் போது ஆயுதங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான தகவல் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

5 கிலோக்கிராம் நிறைகொண்ட இரு கிளைமோர்க் குண்டுகள் அவற்றில் அடங்குவதாக கூறப்படுகின்றது.

இதைவிட ரி–56 ரகதுப்பாக்கிகள், 30 தோட்டாக்கள், 2மகசின்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான தகவல் மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ச–9)

# ஜேர்மனி காலிறுதிக்கு

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுப் போட்டியில், நேற்று ஜேர்மனி– சுவீடன் ஆகிய அணிகள் மோதின. இதில் ஜேர்மனி அணி 2:0 என்ற கோல்கணக்கில் சுவீடன் அணியை அபார வெற்றி பெற்று காலிறுதிக்குத் தெரிவாகியது. (ச–5)

# திலீபன் நினைவுத் தூபி சேதமாக்கப்படவில்லை

## பலாலி இராணுவத் தலைமையகம் தெரிவிப்பு

(பலாலி)

யாழ்.நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைத்தூபி இராணுவத்தினரால் சேதமாக்கப்படவில்லையென பலாலி இராணுவத் தலைமையகம் மறுத்துள்ளது.

அவ்விடயம் சம்பந்தமாக தலைமையகத்தினால் விசாரணை நடத்தியதில் அந்நினைவுத் தூபி அடித்து நொருக்கப்படவில்லை என்றும் அருகிலுள்ள படத்திற்கும் மட்டும் சிறுசேதம் ஏற்பட்டுள்ளது என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இச் செயலுக்கும் இராணுவத்தினருக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இது மறைமுகமாக இராணுவத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒரு குழுவினரால் திட்டமிட்டு நடாத்தப்பட்டுள்ளதுஎன இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச–5)

## தேசிய பிரச்சினை தொடர்பில்

# கூட்டணிக் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை தேவை - ஐ.தே.க.

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் உடனடியாக ஒரே நிலைப்பாட்டிற்கு வர வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு.ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இது குறித்து கரு. ஜெயசூரிய கருத்துத் தெரிவிக்கையில்,

தேசிய பிரச்சினைத் தீர்வில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனது பொறுப்பினை சரிவர நிறைவேற்றியிருந்தாலும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையில் ஒரே கருத்தை கட்டியெழுப்ப முடியாதுள்ளதால் நாடு நாளுக்குநாள் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது.

பொதுவாக எதிரியெனக் கருதி செயற்படுவதிலும் பார்க்க தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கிடையில் பொது இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளாது கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்துவதிலோ குழுக்களை அமைப்பதிலோ எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை என்றார். (க)

# கண்காணிப்...

இது தொடர்பாகப் புலித்தேவன் தகவல் தெரிவிக்கையில்,

நோர்வேயின் தூதுவர் ஹான் பிறட்ஸ்கர் காலக்கெடுவை நீடிக்கும்படி எம்மிடம் கோரியிருந்தார். அதற்கு அமைவாகவே நாம் இந்த நீடிப்பை செய்துள்ளோம்.

பதுங்கித் தாக்கும் நடவடிக்கைகள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், மோதல்கள் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் இன்றைய நிலையில் 20 கண்காணிப்பாளர்களை மட்டும் வைத்துக் கொண்டு கண்காணிப்புப் பணிகளைத் தொடர்வது ஒரு வெற்றிடத்தை உருவாக்குவதாகவிருக்கும் என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதனையடுத்து காலக்கெடுவை நீடிக்க தீர்மானித்தோம் என்றார்.

இதேவேளை ஸ்கன்டினேவிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் ஒஸ்லோவில் 29 ஆம் திகதி இது பற்றி பேசுவதற்கு கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச–5,6)

# யாழ்.பல்கலைக்கழக...

அத்துமீறிய காரணத்தினை எமக்கு தெளிவுபடுத்தல் வேண்டும்.

இல்லையேல் எமது பல்கலைக்கழக செயற்பாடு உள்ளடங்கலாக அனைத்து செயற்பாடுகளையும் இடைநிறுத்த வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம் என அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.பல்கலைக் கழகத்தினுள் இராணுவத்தினர் அத்துமீறி நுழைந்த செயற்பாட்டைக்கண்டித்து யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கையொன்றை வெளியிட்டது. (ச–5)

INFORMATION TECHNOLOGY PARK
. Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Science and Technology

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office : 021 222 3641
Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

On-Line Classes

- Diploma in PC Application & Office Management
(MS Office syllabus included)

Work shop


- PC Maintenance & Repairs

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் வார நாட்களில் தொடர்பு கொள்ளவும்

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் 05-07-2006
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் 08-07-2006

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம்: 250/-

Centre for Information Technology
-Executive Officer




NEW SCIENCE HALL
கன்னாதிட்டி ⟷ யாழ்நகர்
A/L 2007
DAY CLASS
கணித, உயிரியல் பிரிவு
2006 பரீட்சைக்கு
தோற்றியோருக்குரியது
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்:- 28.06.2006 WED
7.00 A.M
[சு-அ-385]

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.